# திருவரங்கச்

# சிலேடை மாலை

ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்கார்

1936

ஸ்ரீ
திருஞானமுத்திரை துணை

ஸ்ரீ வானமாமலை மடம் ஆஸ்தான வித்வான்,
தென்திருப்பேரை:
அபிநவகாளமேகம்
அபிநவ பிள்ளைப்பெருமாளையங்கார்
என்று வழங்குகின்ற,
ஸ்ரீமத்
ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்கார் சுவாமிகள்
இயற்றிய

# திருவரங்கச் சிலேடை மாலை

மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர். வே. சாமிநாதையரவர்களால்
பரிசோதிக்கப்பெற்றது.

விருதுநகர், நாடார் டவுன் ஹைஸ்கூல்
தலைமைத் தமிழாசிரியர்
A. இராஜகோட்டியப்ப பிள்ளையவர்களது
குறிப்புரையுடன்,

சங்கரன்கோவில், தாசில்தார்
ஸ்ரீமான். A. V. திருவேங்கடத்தையங்காரவர்கள்
பொருளுதவியால்,

விருதுநகர் எஸ். பி. பிரஸில்
அச்சிடப்பெற்றது.

பதிப்புரிமை] 1936 [விலை அணு 6.

S. P. PRESS
VIRUDHUNAGAR.
*Dec. '36.*

ஸ்ரீ:



ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி

**சின்னக்கலியன் ராமாநுஜ ஸ்வாமி.**

(ஸ்ரீ வானமாமலை மடம் 25-வது பட்டம்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ வானமாமலை ஸ்வாமி ஸாதித்தருளிய ஸ்ரீமுகம்.

ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யவேதாந்தப்ரதிஷ்டாபநாசார்ய: ஸ்ரீமத்ராமாநுஜாபராவதார ஸ்ரீமத்வரவரமுநீந்த்ராஷ்டதிக்கஜ ப்ரதமகணிதை: ஸ்ரீமத்ரம்யஜாமாத்ருயதிவரக்ருபாபாத்ர ஸ்ரீவரமங்காஸமேத ஸ்ரீதேவநாயகாந்தரங்ககைங்கர்யதுரந்தரை: ஸர்வம்ஸஹாமஹீமண்டலாலங்காரமஹீபாலகோடீரகோடிகடிதமணிகிரணபடலபாடலிதபாதபீடம்பயோஜநாசார்யை: பரமார்த்தலக்ஷணவிலக்ஷண ஸோபேக்ஷக ப்ரயோஜநார்த்தபஞ்சகஜ்ஞாநைகஸாதந ஸ்ரீமதஷ்டாக்ஷராதி ரஹஸ்யத்ரயஜகஜ்ஜீவநாசார்ய: ஸகலமுநிஜநமாநஸாரவிந்தஸஞ்சோதஹம்ஸமஸ்ராஸஸமஸ்ஸித ஸ்ரீராஜஹம்ஸாவதாரை: ஸ்ரீமத்பகவத்ராமாநுஜஸித்தாந்தநிர்வாஹகாசார்யஸார்வபௌமை: ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர ஸ்ரீதோதாத்ரிராமாநுஜ யதீந்த்ரை:,

ஶ்ரீமத்தேஶிகஸத்குணஸம்பந்நாய வர்த்தமாநஸ்வாமி த்ராவிடவம்ஶிதாய அநந்தக்ருஷ்ண அய்யங்கார் கவிவராய இதம் ஸமர்ப்யதே ।

பவதா ப்ரணீதாந் ஶ்லோகேஷு காவ்யநாவதோவிஶேஷவத்ஸம்யோஜவிஶிம்ஶிதாந் (திருவரங்கப்பெருமாள் — திருவேங்கடமுடையான் இத்யாதி) ப்ரபந்தாந் ஸர்வஜ்ஞநிஶ்ஶேஷ ஹ்ருதயம் ஸந்நிதிப்ராப்திதாந்தரங்காயம் பவதோ விஷயதர்ஶந கவித்வாத் தஸ்ய பூர்வாநுராகேண (அஹீநவ வித்வத்வரேண்ய அய்யங்கார் இதி) விராஜதே பவந்தம் விஜ்ஞாபயாம: । அத்யைவ கவிகுலதிலகேந ரசிதாநீய மாநகீர்த்திமாந் பவாந் ஸுபர்ணாரோஹணாதிஸஹிதவிதஶ்ரேய:ஸம்பாதநை: அதிஶயிதம் ஸமர்ப்பயாம இதி ।

ஶ்ரீராமாநுஜந் என்று ஶ்ரீஸ்வாமி

திருவெழுத்து.

விரோதிக்ருந்நாம ஸம்வத்ஸர மகரமாஸ ஶுக்லபக்ஷ ஸப்தமீ ஶுக்ரவார ।

1087-௵ }<br>
தைமீ 13௳ }

மைசூர் ஸம்ஸ்தானத்தில் வித்வத்ரத்நம் என்று பிரக்யாதிப்பெயர்பெற்றவரும் திருநாராயணபுரம் ஸம்ஸ்க்ருத காலேஜில் தலைமைப் பண்டிதரும் ஜைமிநிஸூத்ர ஸாமவேதியும் ஐம்பத்திருவரைச் சேர்ந்தவருமான குப்பண்ணஸ்வாமி யென்ற ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்ய மஹாவித்வானால் கொடுக்கப்பட்ட அநுமோதநபத்ரிகா ।

ஸ்ரீ தாம்ரபர்ணீதீரஸ்தித தென்திருப்பேரைநாமக திவ்யக்ஷேத்ரவாஸீ ஸ்ரீமாந் அநந்தக்ருஷ்ணாசார்யநாமா பண்டிதவர்ய: த்ராவிடபாஷாயாம் அதீவநைபுண்யம் ப்ராப்ய ஸம்ஸ்க்ருதபாஷாயாமபி ப்ராகல்ப்யம் ஸம்பாதிவாந் । அயம் ச தத்ர தத்ர த்ராவிடபாஷாப்ரஸ்தாவக ஸபாஸு பரீக்ஷிதஸ்வபாண்டித்யேந ஸூராபாஷம் ப்ராப்த: । ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யை: ஸ்ரீமத்ராமாநுஜஸித்தாந்த நிர்தாரண துரந்தரை: ஸ்ரீமதாண்டவ ஜீயர்ஸ்வாமிபி: அஸ்ய வைதுஷ்யாதிஶயமாலோக்ய அபிநவபிள்ளை ப்ரமாணஸம்ப்ரதாயார் இதி பிருதநாமதேயம் ராமகவசபரிஸஹித மநுக்ருஹீதம் விஶிஷ்டபுண்யாயம் அநந்தக்ருஷ்ணாசார்ய: ஐஶ்வர்ய சக்ரவர்த்தி: ராஜராஜ இதி ஸமநுக்ருஹீதநாமதேயஸ்ய மஹாராஜாதிராஜஸ்ய மைசூர் ராமாயண மஹோத்ஸவ வைபவ ப்ரகாஶகம் வசனம் ப்ரபந்தம் ஸர்வஜநோபயோகாய த்ராவிடபாஷயா நிர்மாய ப்ரகடீசகார । தத் ப்ரபந்தம் பரிஶீலநஶாலிந ஸ்வேஷாம் மைசூர்ராமாயணமஹோத்ஸவம் ப்ரத்யக்ஷேணாநுபவந்தீ

𑌤𑌤𑍍𑌰 𑌨 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌸𑌂𑌶𑌯 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌮𑌿 । 𑌅𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌬𑌂𑌧-
𑌗𑌾𑌂𑌭𑍀𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌂 𑌤𑍁 𑌨 [illegible] 𑌪𑌾𑌰𑌾𑌯𑌣 [illegible]
[illegible] 𑌤𑌸𑍍𑌯 [illegible]
[illegible] 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌵𑌤𑍍 [illegible] ।
𑌅𑌸𑍍𑌯 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌵𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 [illegible]
[illegible]
[illegible] 𑌨𑌗𑌰𑍀 [illegible]
[illegible]
[illegible] 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍀𑌕𑍃𑌤𑌂 । [illegible]
[illegible]
[illegible] । [illegible] 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌵𑌰𑍍𑌯𑌸𑍍𑌯
[illegible] 𑌸𑌂𑌪𑌾𑌦𑌿𑌤𑌂 [illegible]
[illegible]
[illegible] 𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌸𑌂𑌪𑌤𑍍𑌕𑍁-
𑌮𑌾𑌰𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌷𑍍𑌯𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌕𑍃𑌪𑌾𑌵𑌾𑌤𑍍𑌸𑌲𑍍𑌯𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌤𑍍 [illegible]
[illegible] । 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌚𑌾𑌰𑍍𑌯
இதி கன்னடத்தில் கையெழுத்து. 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤 காலேஜ்
𑌅𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀 [illegible]. [illegible] 𑌸𑌂-
𑌵𑌤𑍍𑌸𑌰𑍇 𑌕𑌨𑍍𑌯𑌾𑌮𑌾𑌸𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌦𑌿𑌵𑌸𑍇 𑌸𑍋𑌮𑌵𑌾𑌸𑌰𑍇.

அபிநவ காளமேகம்
அபிநவ பிள்ளைப்பெருமாளையங்கார்



ஸ்ரீ. அநந்தகிருஷ்ணையங்கார்.

# முகவுரை

செந்தமிழ் மொழியிற் சிறுகாப்பிய வகைகள் பல. அவற்றுள் சிலேடை மாலையும் ஒன்று. அஃது நூறு வெண்பா மலர்களால் தொடுக்கப்பெறுவது. திருவரங்கச் சிலேடை மாலை யென்னும் இப்பிரபந்தம், திருவரங்கம் என்னும் தெய்வத் திருப்பதியைப் புகழ்ந்து கூறுவது. ஒவ்வொரு வெண்பாவிலும் முன்னிரண்டடி திருவரங்க நகரின் சிறப்பு; பின்னிரண்டடி திருவரங்கநாதனின் சிறப்பு. "ஊர்" என்னும் துறையில், 'திருவரங்கம், திருமாலின் திருப்பதி' என்னும் வாய்பாட்டான் ஒவ்வொரு செய்யுளும் இயன்றுள்ளது. ஒவ்வொரு வெண்பாவும் திருவரங்க நகரின் சிறப்பை இரண்டு முதல் ஐந்து சிலேடைகளாலும், திருமாலின் பெருமையை யமகம் அல்லது திரிபு என்னும் சொல்லணியாலும் விளக்கி நிற்கிறது. சிலேடை யாவது என்னை? உச்சரிப்பில் ஒரு தன்மைத்தா நின்ற சொற்றொடர் செம்மொழியாகவும் பிரிமொழியாகவும் நின்று இரண்டு முதலிய பல்பொருள்களைத் தருமாறு அமைவது. யமகமாவது மடக்கு. வந்த எழுத்து சொல் தொடர்களே திரும்பவும் வந்து வெவ்வேறு பொருள் பெற நிற்பது. திரிபு, இங்ஙனம் வருதலில் முதலெழுத்து மாத்திரம் வேறுபட்டு நிற்பது.

நம் தமிழ்மொழியில் ஸ்ரீ பிள்ளைப்பெருமாளையங்காரியற்றிய திருவேங்கடமாலை, இவ்வகையான பிரபந்தங்களிற் சிறந்தது. சைவபரமாகக் கலைசை, சிங்கை, நெல்லை, துன்றைச் சிலேடை வெண்பாக்கள் சிறந்தவை. இந் நூல்களிலெல்லாம் பெரும்பாலும் இரண்டு சிலேடைகளே காணப்படுகின்றன; மூன்று சிலேடைகளும் அருகி வருகின்றன; யமகமும் திரிபும் விரவி நிற்கின்றன. திருவரங்கச் சிலேடை மாலை யென்னும் இந்நூலிலோ, முதற் பாட்டுத் தொடங்கி, ஐந்து பாடல்களுக்கு ஒருமுறையாக மொத்தம் இருபது பாடல்களில் மூன்று சிலேடைகளும், பத்துப்

பாடல்களுக்கு ஒரு முறையாகப் பத்துப் பாடல்களில் நான்கு சிலேடைகளும், நூறுவது வெண்பாவில் மாமணி மகுடம் போல் ஐந்து சிலேடையும் மிளிர்கின்றன. அவ் அஞ்சு சிலேடை புலவர்க்கு அஞ்சு சிலேடை யென்பதே தேற்றம்! மூன்று, நான்கு, ஐந்து சிலேடைகளமைந்த செய்யுட்களி லெல்லாம் பெரும்பாலும் யமகவணி காணப்படும். பிற செய்யுட்களிலும் பலவிடங்களில் அவ் யமக வணி காணப்படுகின்றது. பல செய்யுட்களில் யமகப் பகுதியில் சொற்கள் மூன்றிடங்களில் மடக்கி வருகின்றன. இவ் வணிநயங்கள் அறிஞர்களால் கொண்டாடத்தக்கவை! எளிதிற் பொருள் விளங்கும் வண்ணம் சிலேடை, யமகம், திரிபுகள் அமைதல் இந் நூலாசிரியரது இயற்கைக் கவிதா சாமர்த்தியத்தை விளக்குகின்றது!

இயற்கை வருணனைகளும், செயற்கை வருணனைகளும் மலியும் வண்ணம் ஆசிரியர் திருவரங்க நகரைச் சிலேடையணிகளாற் சித்திரித்துக் காட்டுஞ் செய்யுள் நயம் பாவலர் உளத்தைப் பரவசமாக்க வல்லது! பாட்டுடைத் தலைவனைப் போற்று முகத்தான் ஆசிரிய ரமைத்துள்ள பொருளழகுகள் அழகு வாய்ந்தன! திருமாலின் தசாவதாரங்கள், ஆழ்வாராதியரின் அருமைத் திருப்பாசுரங்கள், அத் திருப்பாசுரங்களோ டொப்ப மதிக்கத்தக்க திவ்யகவி ஸ்ரீபிள்ளைப்பெருமாளையங்காரது நூல்கள் முதலிய விஷயங்களைத் தக்கவிடங்களில் அமைத்துள்ளார். இன்னும் தாம் தோன்றிய திவ்விய தேசமாகிய தென்திருப்பேரைத் திருநகரையும், அதன்கண் எழுந்தருளிய ஸ்ரீ மகர நெடுங் குழைக்காதரது திருநாமத்தையும் மறவாமல் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியர், தாம் சாமவேதீ யாதலின் சாமகானத்தின் மேன்மையையும், சோழியர் குலமாதலின் சோழியர் குலச் சுடர்மணி விளக்காகிய ஸ்ரீ ஆண்டாளின் பெருமையையும் சில பாடல்களில் அமைத்துக் கூறியுள்ளார். தாம் வாழ்வது இருபதாம் நூற்றாண்டாதலின், இருப்புப் பாதை முதலிய சில நவீன நாகரீகங்களும் நூலின்கண் இடம்

பெறச் செய்தனர். ஆங்காங்குக் காணப்பெறும் அழகுகளை யெல்லாம் எடுத்தோதின் விரியும். இந்நூலை ஒரு சிறிது படிக்கக் கேட்டாலும் பாவலர் சிரகரகம்பிதம் செய்வதில் ஆட்சேபமில்லை! தமிழ்மாணவர் தமிழறிவில் தலைப்படுதலிலும் ஐயமில்லை!

பிரபந்த சிரோ பூஷணமாகிய இந்நூலைத் தமிழ்நாடு செய்த தவப்பயனாகத் தந்தருளிய கவியரசர் யார் எனிற் கூறுதும். தென்றமிழ் நாட்டில் ஸ்ரீ நம்மாழ்வார் திருவவதரித்த ஆழ்வார்திருநகரிக்குக் கிழக்கே மூன்று மைல் தூரத்தில் "தென்திருப்பேரை" என்றோர் திருப்பதியுண்டு. அதில் ஜைமினி ஸூத்திர தலவகார ஸாமவேத பூர்வசிகை வைணவ அந்தணர் குலத்தில், தமிழ்ப் புலவர் மரபில், சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் திருவநந்தபுரம் கர்ப்ப ஸ்ரீமான் சுவாதி திருநாள் அரசர் பெருந்தகைபால் வட்டக்கடுக்கன், பொன் வீர சங்கிலி முதலிய பரிசுகளும், மாதந்தோறும் உபகாரச் சம்பளமும் பெற்றுப் பெருந்தமிழ்ப் புலவராக விளங்கிய ஸ்ரீ சின்னத்தம்பு குழைக்காதையங்கா ரென்பவர்க்குப் புதல்வராகிய கவி ஸ்ரீநிவாஸய்யங்காரும் அவர்தம் அருமைத் தேவியார் ஸ்ரீ குழைக்காத நாச்சியாரும் ஆற்றிய *அருந் தவப் பேற்றால் எட்டாவது புத்திரராக கி. பி. 1869-ம் ஆ அவதரித்த அபிநவ காளமேகம், அபிநவ பிள்ளைப்பெருமாளையங்கார்—ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்கார் சுவாமிகளாவர். கருவிலே

*முதலிற் பிறந்த குழந்தைகள் ஆறும் ஒவ்வொரு வயதிற்குள் இறந்துவிட்டன. ஏழாவது புத்திரர் நற்றவப் பயனால் தங்கினர். அவர், ஸ்ரீ பிச்சுவையங்கார். தற்காலத்தில் 'ஆநந்தவிகடன்' முதலிய செந்தமிழ்ப் பத்திரிகைகளின் வாயிலானும், சொற்பொழிவுகளானும் பண்டிதர் பாமரர் யாவரும் பருகக் கம்பராமாயண வின்னமுதத்தைப் பகிர்ந்தூட்டிப் பிரபலமாக விளங்குகின்ற ஸ்ரீமான் பி. ஸ்ரீ. ஆசார்யாரவர்கள், ஸ்ரீபிச்சுவையங்காரது அருந்தவப் புதல்வர். ஒன்பதாவது புத்திரர் ஸ்ரீ நம்பி ஐயங்கார். இவர், இந்நூலாசிரியரியற்றிய "தனிப்பா மஞ்சரி" என்னும் நூலுக்குக் குறிப்புரை யெழுதியவர்.

திருவும் கவிநலமும் வாய்த்த இக் கவிஞர் பெருமான், இளமையிலேயே வடமொழி, தென்மொழி யிரண்டினும் சிறந்த புலமை பெற்று விளங்கினர். வடமொழி வேதமும் தென்மொழி வேதமாம் திவ்விய பிரபந்தங்களும் கற்றதனோடமையாது, காளமேகமும் அழகிய மணவாளதாசரும் பாடிய இன்றமிழ்ப் பாடல்களை அள்ளியள்ளிப் பருகிய அநுபவ ஜனிதமாக இவரது திருவாக்கினின்று செம்பாகமான சிலேடைகளும், சிறந்த பிரபந்தங்களும் கரை புரண்டோடும் வெள்ளமெனப் பெருகி வழியலாயின. இவரது மாசற்ற ஆசுகவிப் புலமையை வியந்து புலவர் குழாம், "அபிநவ காளமேகம்" என அழைத்தது. ஸ்ரீவானமாமலை மடம் 25-வது பட்டம் ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி சின்னக்கலியன் ராமாநுஜஜீயர் சுவாமிகள் இருமொழியுடன் பல மொழிப் புலமை சான்ற பரம புருஷர். அவர்கள் நம் புலவர்பிரானது கவிவன்மையை யுணர்ந்து, தம் ஆஸ்தான வித்துவானுக்கி ஆதரித்துச் சால்வை முதலிய பரிசுகள் பல சந்தர்ப்பங்களில் அளித்து, "அபிநவபிள்ளைப் பெருமாளையங்கார்" என்று அபிதானமும் அருளினார்கள்.

சென்னையில் தற்காலம் தண்டமிழ்த் தலைமைபூண்டு விளங்கும் மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் பிரமஸ்ரீ வே. சாமிநாத ஐயரவர்கள் இப் புலவர் பிரானது கவியாற்றலை நேரிலும், காணாவிடத்தும் பாராட்டிக் கூறும் வழக்கங் கொண்டிருக்கின்றார்கள். 1911-ம் ஸூ டெல்லிமாநகரில் நிகழ்ந்த மன்னர்பிரான் மாமணி மகுட விழாவைப்பற்றி நம் கவியரசர் இயற்றிய 'மகுடதாரண வைபவ வெண்பா' தங்கத் தோடா பரிசில் பெற்றது. அம்மன்னர் பிரானது வெள்ளி விழாவிலும் நம் புலவர்திலகர் புகன்ற 'கமல பந்த வெண்பா' பொற்பதக்கத்துடன் கூடிய கனகச்சங்கிலி வெகுமதி யடைந்தது. சென்னை, கவர்னராக விளங்கிய கோஷன் துரைமகனாரும் இவரது கவிதா சாமர்த்தியத்தை நேரிற் கண்டுணர்ந்து கைகுலுக்கி மெச்சிக் கொண்டாடினர்.

சமயோசிதமாக இப் புலவர்பிரானியற்றிய சிலேடை முதலிய தனிப்பா மலர்களைத் தொகுத்துத் "தனிப்பா மஞ்சரி" என்றொரு புத்தகமாகச் சிலமாதங்களின் முன்னர் ஸ்ரீவைகுண்டம் வழக்கறிஞரும் வள்ளலார் மணியுமாகிய திருவாளர் பொன்னம்பலநாத முதலியாரவர்கள் பிரசுரித்-தார்கள். அத் தனிப்பாக்களைப் படித்து மகிழ்ந்து பாவலரும், நாவலரும் பாராட்டுரைகள் வரைந்து கொண்டிருக்கிறார்கள். அவை விரைவில் "மதிப்புரைத் திரட்டு" என்னும் பெயருடன் புத்தக வடிவில் வெளிவரும். சிலேடை யமகங்களை அறவே வெறுத்துரைக்கும் பாவலர் கூட இவ்வாசிரியரது பாடல்களைக் கேட்டு வெறுப்பின்றிப் புகழ்ந்துரைப்பார்கள். தமிழறிவில் தலைசிறந்த ஆங்கிலப் பட்டதாரிகள் பலரும் நம் கவியரசரது சிலேடை யாதிய கவிகளைக் கேட்டுப் புகழ்கின்றன ரெனில் இவர்தம் கவி-யாற்றல் என்னே !

இப் பிரபந்தத்தை நம் கவிஞர்கோமான் 1900-ம் ஸூத்துக்கு முன்னரே யியற்றி முடித்தனர். டாக்டர். வே. சாமிநாதையரவர்கள் கும்பகோணம் அரசியற் கல்லூரியில் தமிழ்ப் புலமை நடாத்துகையில் அவர்களை நம் ஆசிரியர் முதன்முறையாகக் கண்டு இந்நூலைக் காட்டினர். புலவரது ஆற்றலைப் பொருக்கென வுணரும் ஐயரவர்கள் இந்நூல் முழுமையையும் பார்வையிட்டுச் சிற்சில இடங்களிற் பொற்புறத்தக்க சொற்பத் திருத்தங்களும் கூறிச் சிறப்புப்பாயிரமும் அளித்தார்கள். இத்துணைக் காலம் நீட்டித்ததாயினும் இவ் வருமையான பிரபந்தம் அச்சுவாகனத்தேற அன்பு கூர்ந்து பொருளுதவி செய்த பெருந்தகையாளர், சங்கரன் கோவில் தாசில்தார், ஸ்ரீமான் A. V. திருவேங்கடத்தையங்காரவர்களாவர். இம் மகோபகாரி இருபெருஞ் செல்வமும் ஒருங்கே எய்தி நீடுவாழ்க! இந்நூலுக்குக் குறிப்புரையொன்று எழுதித் தரும்படி எனக்குக் கட்டளையிட்டருளிய நம் கவிஞர் பெருமானது அன்பின் திறத்தை என்றும் மறவேன்.

தமிழ் பயில்வார்க்கு எளிதில் திறமை மிகுத்துத் தரவல்ல இப்பிரபந்தத்தைச் சென்னைப் பல்கலைக் கழகத்தாரும், ஸ்ரீ அண்ணாமலை சர்வகலா சங்கத்தாரும் ஆங்கிலப் பட்டப் பரீக்ஷைகளில் தமிழ்ப் பகுதிக்கும், தமிழ் வித்துவான் பரீக்ஷைகட்கும் பாடமாக ஏற்படுத்துவார்களாயின், நம் தமிழ்ப் புலவரையும், தமிழ் மொழியையும் ஆதரித்தவர்களாவர் என்பதே என் துணிவு.

A. இராஜகோட்டியப்பன்,
தலைமைத் தமிழாசிரியன்,
நாடார் டவுன் ஹைஸ்கூல்.

விருதுநகர்,
22–11–'36.

## AN APPRECIATION

I have had the great pleasure and privilege of being acquainted with Brahmasri Anantakrishna Aiyangar of Tentiruperai for many years. He is a Tamil Scholar and poet of high merit and distinction. His poems are varied in character as regards subject matter, but are uniformly sweet and flowing, and they exhibit in a remarkable degree the excellent adaptability and flexibility of Tamil for the expression of high poetic ideas. His manipulation of delightful *double entendres* is wonderfully facile. He is also a good Sanskrit scholar. He is the ASTHANA PANDIT OF SRI VANAMAMALAI MUTT, a position to which, by his scholarliness and poetic excellence, he does very great credit.

TRIVANDRUM,
19–1–1930.

(Sd.) K. G. SESHA AIYER,
*High Court Judge (Retired).*

# மதிப்புரை.

திருமணம். செல்வக்கேசவராய முதலியார் M. A.,

மதராஸ், 12—6—'11.

பாளையங்கோட்டையில், சைவ சமயாபிவிர்த்தி ஸபையின் இருபத்தைந்தாவது வருஷோத்ஸவத்தின் பொருட்டு, நான் சென்றிருந்த காலத்தில், தென்திருப்பேரை, கவி. ஸ்ரீ அனந்தகிருஷ்ண அய்யங்காரும், அவர் சகோதரரும் அங்குற்றிருந்தனர். நானும் பிறரும் தங்கியிருந்த மாளிகையில் அவரைச் சந்திக்கும் சமயம் நேர்ந்தது. நேர்ந்த விடத்து, அநந்தகிருஷ்ணர் தாமியற்றிய ஸ்ரீ பத்மநாப ஸ்வாமி சந்திரகலா மாலை, திருவரங்கச் சிலேடை மாலை, தனிப்பா மஞ்சரி, திருப்பேரைக் கலம்பகம் முதலிய நூல்களினின்றும் பல பாக்களை எடுத்தோதி விளக்கினர். புதிய வசன நூல்களை வாசிப்பதும், எழுதுவதும் எனக்குக் காலக்ஷேபம். புதிய செய்யுள் நூல்களை நான் பார்ப்பதுமில்லை; கவனித்துக் கேட்பதும் இல்லை. ஆயினும், இந்தக் கவியின் சிலேடைகளைக் கேட்ட அளவில், காளமேகம் அகாலத்தில் வந்து கவிமாரி சொரிகின்றதோ? என்கிற ஐயம் புகுதலாயிற்று. இவருடைய மடக்குகளைக் கேட்ட அளவில், சைவ எல்லப்ப நாவலரையும், பிள்ளைப்பெருமாளையங்காரையும், மீண்டும் பார்க்க வேண்டுமென்கிற எண்ணம் எழலாயிற்று. முப்பாலில் முடிவான பாலனைத்தும் இவர்பால் கண்டு, ஏனைப்பால்களை அப்பால் விடுதலான வெறுப்பும் போந்தது. ஏனை ரஸமெல்லாம் பாதரஸமே; இவர் கவிரஸமே ஷட்ரஸமாதலால், இதனை யின்னுங் கோடலான விருப்பும் உளதாயிற்று. அப்போது அங்குற்ற ஸ்ரீவைகுண்டம் தாசில்தார் ஸ்ரீ. வேங்கடசாமி முதலியாரவர்கள் கவிராஜரை 'நிமிஷகவி' யென்றார். அந்தோ! காட்டைக் கவி, கலைக்கவி என்ற வழக்காறின்றே! என வருந்தினேன். இக் காலக் கவிகளில் அநேகரிருந்தும் இறந்த காலக் கவிகளே. இந்த அனந்தகிருஷ்ணர் நிகழ்கால எதிர்காலக்கவியென்பது திண்ணமாகத் தோன்றுகிறது. மதுரகவி ஆழ்வார் குலத்தரான இவரையும் இக் கால மதுரகவி யென்றே போற்றவேண்டும். இவ்வென்கூற்றைக் கேட்பவர் இதனை அதிசயோக்தியாகக் கருதக்கூடும். இவருடைய கவிகளைக் காண்பவரும், கேட்பவரும் என் கூற்றை ஸ்வபாவோக்தி யென்றே கொள்வர். இந்தக் கவிராஜர் இன்னும் கால நீடித்தல் செய்யாது, தமது நூல்களை யெல்லாம் ஒருசேர முத்ரித்துக்காட்டி என் கூற்றை மெய்ப்பிப்பாரென்று விரும்புகிறேன். இவர் கருவிலே திருவுடைய கவியென்பதே என் கோள்.

மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலைத் தலைமையாசிரியர்,
உபய மஹா வித்வான், ஸ்ரீமத்.
உ. வே. திருநாராயணையங்கார் ஸ்வாமி அவர்கள்

# அபிநந்தனப் பத்திரிகை.

நேரிசையாசிரியப்பா

திருமக ளென்றும் மருமக ளொடுவாழ்
சீரியன் தென்திருப் பேரைமா நகரோன்
தேசமர் சீநி வாச வே தியனுர்
நன்மைப் புதல்வன் தொன்முறை வழாது
வடமொழி தென்மொழி திடவல் லுநனுத்
தலைவகா ரம்மென உலவுநற் சாமமாம்
வேதமுந் தமிழ்தரு வேதமு முணர்ந்தோன்
உயர்ந்தோர் குழாத்தி னுட்கொளப் பெற்ருேன்
அநந்த சயனத் தநந்தன் பதமிசை
புனைந்தசந் திரகலா மாலையும், பொன்னிசூழ்
திருவ ரங்கச் சிலேடை மாலையும்,
திருப்பே ரைப்பதி விருப்புறு மாற்கு
நலம்படி யின்சொற் கலம்பகம் முதலாப்
பலபிர பந்தம் பலமுறப் பாடி,
வானமா மலைமுனி வரரருள் அபிநவ
பிள்ளைப் பெருமாள் எனும்பெயர் பெற்ருேன்
தனிப்பா மஞ்சரி யினிப்பா வியம்பினன்
காள மேகக் கவியெனப் புவிசொலும்
அநந்த கிருஷ்ண வாரியன்
கனிந்த செஞ்சொற் கவிஞ ரேறே!

(31—8—'35.)

# சிறப்புப் பாயிரம்

## மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர். பிரமஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள்.

வெண்பா

அணியரங்க மாலை யடிபணிந்தன் னான்றாட்
கணியரங்க மாலை யணிந்தான்—தணிவில்
அநந்தவளத் தென்பேரை யான்றலவ காரன்
அநந்தகிர்ஷ்ணப் பேர்க்கவிஞ னாய்ந்து.

(1900-ம் ௵)

---

## சிவகங்கை, இராமநாதபுரம் சமஸ்தான வித்வானும், சிலேடைப் புலியுமாகிய வேம்பத்தூர், பிரமஸ்ரீ பிச்சுவையரவர்கள்.

வெண்பா

ஆலையுறு வான்றாட் கரங்கச் சிலேடைவெண்பா
மாலையன்பாய்ச் சூட்டியிசை மன்னினான்—ஆலையுடன்
தென்னநந்த மாவருக்கை சேருந் திருப்பேரை
மன்னநந்த கிர்ஷ்ணகவி மான்.

(1904-ம் ௵)

---

## வேம்பத்தூர், சங்க வித்வான் பிரமஸ்ரீ சா. ஆ. ஸௌந்தரமையரவர்கள்.

வெண்பா

அண்டரெலாம் போற்று மரங்கச் சிலேடைவெண்பா
தண்டமிழோர் கொண்டாடச் சாற்றினான்—மண்டுசிறை
சூழநந்தம் பேடையொடு தூங்குவயற் பேரைநகர்
வாழநந்த கிர்ஷ்ணகவி மான்.

(1904-ம் ௵)

## திரிசிரபுரம், எஸ். பி. ஜீ. காலேஜ்
## தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த
## ஸ்ரீமான் ஆ. கா. பிச்சை யிபுராகிம் புலவரவர்கள்.

### ஆசிரியப்பா.

பாற்கடன் மேவிப் பரிதியஞ் செல்வன்
தானெனத் தோற்றுந் தகைசால் பெருமான்
பொற்சரண் மீமிசை நற்பா வலங்கல்
சூட்டியே யடையுமோர் மேட்டிமை நிகர்ப்பப்
பிறிதிலை யெனமன முறுதியிற் கொளீஇ
நாவலர் மனத்தில் மேவிய விறும்பூ
தடைதர வொருவகைச் சொற்றொடர் பலபொருள்
செய்பிரி மொழியாஞ் சிலேடையே முதலாப்
பிறவணி யகங்கொள வறமுதற் குதிகொளத்
திருவரங் கத்துச் சிலேடை மாலையாம்
ஒருநூ லியற்றிப் பெருமை வாய்ந்தனன்
குமரி வேங்கடம் மேல்கீழ்ப் பெருங்கடல்
அருந்தமிழ் நாட்டிற் றிருந்திய கல்வி
திருமகிழ் மாறன் றிருவருட் டிறமையாற்
கற்றலிற் றன்னிகர் மற்றவ ரிலையெனப்
பாட்டினை யியற்றிக் காட்டிடு புலமை
மேவின னெமக்குமோ ராவினேர் கேண்மையன்
கைம்மலைக் கையென மெய்வரி வராலினங்
கன்றுளி மேதி கறக்குவெள் ளமுதிற்
றிகழ்தரப் பிறழுந் தென்றிருப் பேரை
அநந்தகிர்ஷ் ணப்பெய ரணிநா வலனே.

(1900-ம் ௵)

திரிசிரபுரம், வித்வான்.

ஷோடசத்வயாவதானம்

மகா-ள-ள-ஸ்ரீ

## தி. அ. சோ. இராமலிங்கம் பிள்ளையவர்கள்.

### நிலைமண்டிலாசிரியப்பா.

உலகினுக் கணியாய் நிலவுறு செந்திற்
பதிக்கு மமரர் துதிக்குரு கூர்க்கும்
நாப்பண் ணமைந்த காப்பண் ணகராந்
தென்றிருப் பேரையிற் றன்றிவாழ் நயனெழின்
மேனிவா சக்கவிச் சீநிவா சப்பெயர்
அண்ணல்தன் றவமே நண்ணிய வுருக்கொடு
வந்தன னெனும்படி வந்த மாதவன்
ஆரிய மரபிற் சீரிய சுமுகன்
பன்னூல் முதலிய வெந்நூ லுந்தெரி
அநந்த நற்புக ழநந்த கிருஷ்ணப்
பாவல னிலனுறு நாவல ருவப்ப
நற்றிரு வரங்கன் பொற்றிரு வடிக்குத்
திகழ்தரு வரங்கச் சிலேடை வெண்பா
மாலைசொற் றணிந்தனன் மாலையுற் றழனும்
மானிடப் பிறவி வாரிதி தனக்கோர்
வங்கம தென்ன வழுந்திடத் தானே.

மகான் வண்ணச்சரபம், ஸ்ரீலஸ்ரீ முருகதாச சுவாமிகளின்
மாணவரும், மருகருமான
கோபாலசமுத்திரம்
ஸ்ரீமான். ச. ஷண்முகதாசப் பிள்ளையவர்கள்.

சந்தக் குழிப்பு

தந்தனத் தான தந்தனத் தான
தந்தனத் தான தந்தனத் தனனு

சந்த விருத்தம்

அன்றியற் றேவ ரன்புறப் பேண
ரங்கனுக் கோரி ரண்டருத் தமதா
யொன்றினிப் பேறு வெண்டமிழ்ப் பாவி
னுந்துவப் போடு நன்குரைத் தனனல்
வென்றிவித் தாரன் மிஞ்சுவப் பாகு
மெங்களுக் கோர்வி ளங்கிரத் தினமார்
தென்றிப் பேரை வந்திசைச் சீலர்
சிங்கமொப் பாம நந்தகிட் டிணனே.

நேரிசை வெண்பா

விண்ணமுதைச் செங்கமல வேதனைக்கங் காதரனை
வண்ணநிற மாட்சிமையான் மானுமே—திண்ணரங்க
ஆடுநெடு மான்மே லநந்தகிட்டி ணப்புலவன்
பாடுசிலே டைத்திருவெண் பா.

(1905-ம் ஷு)

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருஞான முத்திரை துணை



# திருவரங்கச் சிலேடை மாலை

## காப்பு

### வெண்பா

திருவரங்க மாற்குச் சிலேடைத்தார் சாத்திப்
பெருவரங்கள் நாளும் பெறவே—வருகவிகள்
கொம்பேறித் தாவுங் குருகூர் மகிழ்மாறன்
அம்போ ருகத்தாள் அரண். (1)

குறிப்புரை:— சிலேடைத்தார்-சிலேடை மாலை; கவிகள்-குரங்குகள்; குருகூர்-ஆழ்வார் திருநகரி; மகிழ்-மகிழம்பூ மாலையையுடைய; மாறன்-நம்மாழ்வார்; அம்போருகம்-தாமரை; அரண்-காப்பு.

அம்போருகத்தாள் - தாமரையில் வீற்றிருப்பவள்; திருமகள் கலைமகள் இருவருக்கும் பொருந்தும்: நம்மாழ்வார், திருமகள், கலைமகள் ஆகிய மூவரும் காப்பாவர் எனவும் கூறலாம். குருகூர் மகிழ் மால் தன் அம்போருகத்தாள்-எனக் கொண்டு, ஆழ்வார் திருநகரியை உவப்புடன் கொண்டருளிய ஸ்ரீ ஆதிநாதரது பாதாரவிந்தம் என்றும் பொருள் படுதல் காண்க.

## பதின்மர்

மன்னும் இதயத்தில் வைத்தேன் சிலேடையதாய்
உன்னு பதங்கள் உதிக்கவே—மின்னும்
மதின்மருவு தண்ணரங்க மாலினருள் வாய்ந்த
பதின்மர் அரும்பூம் பதம். (2)

குறிப்புரை:— பதங்கள்-சொற்கள், பதம்-திருவடி. பதின்மர் பதங்களையும் இதயத்தில் வைத்தலால், உன்னிய பதங்களெல்லாம் பல பொருள்தரும் சிலேடையாய் உதிக்கும் என்று கூறிய நயம் காண்க. பதின்மர் - ஆழ்வார் பதின்மர்; ஆண்டாள், மதுரகவி இருவர் நீங்கலாக.

## ஆண்டாள்

நாடியே நான்பணிந்தேன் நன்கருள்வாய் மல்லிவள
நாடியே! கோதாய்! நறுங்குழல்!நீ—சூடியநன்
மாலை யணியரங்க மாமணவா ளற்குவந்து
மாலைசொல நின்தாள் மலர். (3)

குறிப்புரை:— மல்லிவள நாடி-*மல்லி வளநாட்டிற் குரியவள்-ஆண்டாள். நீ சூடிய மாலையை ஏற்றவனுதலின், நின் தாள் மலர் பணியும் நான் உவந்து சூடும் இப்பாமாலையை ஏற்றுக் கொள்வான் என ஆசிரியர் கூறும் பொருள் நயம் உணர்க.

## மதுரகவி யாழ்வார்

இக்கோன் பிதாவாம் எழிலரங்கன் அண்டரிறைஞ்(சு)
இக்கோன் அடிபுனையும் இம்மாலை—தக்கோர்
மதுரகவி யென்றே மதிப்பான் அமைத்தேன்
மதுரகவி யாரை மனத்து. (4)

---

*மல்லி வளநாடு-வில்லி என்னும் வேடனது தாயான 'மல்லி' என்பவள் ஆண்ட நாடு, மல்லி நாடெனப் பெயர்பெற்றது.

குறிப்புரை:— இக்கோன் பிதா-இக்கு (கரும்பு) வில்லையுடைய மன்மதனுக்குப் பிதா; இ கோன்-இந்தப் பெருமான்; 'மதுரகவி' யென இதனை மதித்துத் தக்கோரெல்லாம் பாராட்டற்காக, மதுர கவி(யாழ்வாரை)யை பணத்து அமைத்தேன் என்றார். அண்டர்-தேவர்; இடையரும் ஆம். அண்டர் இறைஞ்சு இ கோன்-இடையர் வணங்கும் இவ் இடையர் தலைவன் எனவும் பொருள்படுதல் காண்க.

## உடையவர்

சீரங்க மொன்றுந் தெரியா மடநெஞ்சே!
சீரங்கற் கிம்மாலை செப்பவெனில்—தூர
மதித்தலைவீன் றாழை வளர்ந்தோங்கும் பூதூர்
எதித்தலைவன் றாளை யிறைஞ்சு. (5)

குறிப்புரை:— சீர் அங்கம்-சிறப்பு வாய்ந்த ஆறங்கம்; சீர் முதலிய யாப்பின் உறுப்புக்கள் எனவும் ஆம். தூர மதி......பூதூர்-வெகு தூரத்திலுள்ள சந்திரனிடத்திற் பொருந்துமாறு தாழை வளர்ந்-தோங்கும் ஸ்ரீபெரும்பூதூர். தாழை-தெங்கு. எதித்தலைவன்-எதி ராஜர், உடையவர்.

## மணவாள மாமுனி

அல்லும் பகலும் அனுதினமும் என்னெஞ்சே!
சொல்லரிய பேரின்பம் தோய்வதற்கா—நல்ல
குணவாள மாந்தர் குழாமேத்தும் எந்தை
மணவாள மாமுனியை வாழ்த்து. (6)

குறிப்புரை:— குணவாள மாந்தர்-சற்குண சம்பன்னர்களான பாகவதோத்தமர்; குழாம்-கூட்டம்.

## குரு வணக்கம்

சென்னிக் கணிமலராம்; சிந்தையளிக் கற்புயமாம்;
மன்னு பவக்கடற்கோர் வங்கமதாம்—தன்னின்

பதியோ டலர்மங்கை பற்றுவர மங்கைப்
பதிவா ழெதியின் பதம். (7)

குறிப்புரை:— அலர்மங்கை தன் இன் பதியோடு பற்று வர மங்கை - அலர் மங்கையாகிய லக்ஷ்மீதேவி தன் பிரிய நாயகனோடு உகந்து வீற்றிருக்கின்ற வரமங்கைப்பதி. வரமங்கைப்பதி-நான்கு னேரி; எதி-வானமாமலை ஆதீனகர்த்தரும், நூலாசிரியரின் ஞான குருவுமாகிய ஸ்ரீராமாநுஜஸ்வாமி; இவர் ஸ்ரீமணவாளமாமுனியால் நியமிக்கப்பெற்ற அஷ்டகஜங்களுள் முதல்வர். அம்புயம்-தாமரை, வங்கம்-மரக்கலம். எதியின்பதம்-சிரத்திற் சூடும் மலராகவும், மனமாகிய வண்டினுக்கேற்ற தாமரையாகவும், பாவமாகிய கடலைக் கடத்தற்கேற்ற மரக்கலமாகவும் விளங்குகின்றதென்க.

## அவையடக்கம்

நால்ருமை சற்றும் நுகராத புன்மதியேன்
கோலச் சிலேடைவெண்பாக் கூறுவது—பாலகர்தாம்
பாண்டி வரைந்து பரவைவைவட் டாடுங்கால்
தாண்டுவது போலாந் தலத்து. (8)

குறிப்புரை:— பாண்டி-ஒருவித விளையாட்டு; பாண்டி வரைந்து வட்டாடுதல்-அவ்விளையாட்டிற்குரிய அரங்கினை வகுத்து, அதில் கண்டவாய், காடு, சமுத்திரம் எனப் பெயரிட்டு வட்டு ஆடுதல். "அரங்கின்றி வட்டாடியற்றே" என்ற திருக்குறளும் இங்குக் கருதத் தக்கது. பரவை-சமுத்திரம். 'அற்ப மதியையுடைய யான் அழகிய சிலேடை வெண்பாக்களைக் கூறிவிடுவேன் என்பது-பாலகர் பாண்டி வரைந்து விளையாடுகையில், "சமுத்திரம் தாண்டினேன்" என்று கூறுதலை யொக்கும் என்று ஆசிரியர் தம் அடக்கத்தை அறிவித்த வாறு.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருவரங்கச் சிலேடை மாலை

## நூல்

### வெண்பா

(மூன்று சிலேடை)

திங்கணுத லாயிழையார் தேங்கூந்தல், கொங்கை, நடை
அங்கனமே நேரும் அரங்கமே—துங்கவகிச்
சக்கரத்தா னத்தான் தனிவாரி சக்கரத்தான்
சக்கரத்தா னத்தான் தலம். (1)

குறிப்புரை:- திங்கள் நுதல் ஆயிழையார்-சந்திரனை யொத்த நெற்றியையுடைய பெண்கள்; கூந்தல், அம் கனமே நேரும்-ஜலத்தையுடைய மேகத்தை யொக்கும்; அம் - ஜலம், கனம் - மேகம். கொங்கை, அம் கனமே நேரும் - அழகிய பாரத்தைப் பொருந்தும்; அம் - அழகு, கனம் - பாரம். நடை, அங்கு அனமே நேரும் - அன்னத்தை நிகர்க்கும். அனம்-அன்னம்.

துங்கம்-உயர்வு, அகிச்சக்காத் தானத்தான் - சேஷாசலம் என்னும் திருவேங்கட மலையாகிய இருப்பிடத்தைக் கொண்டருளியவன். அகி - பாம்பு. சக்காம் - மலை. தனி - ஒப்பற்ற; வாரிசக் கரத்தான்-தாமரை போன்ற திருக்காங்களை யுடையவன், வாரிசம்-தாமரை. சக்கரத்தான் சுத்தான்-சக்காயுதமும், சங்கும் ஏந்தியவன்; தலம்-இடம்.

செம்பொன் மதிற்புறத்தும், தேர்வீர் தூணியிலும்,
அம்பகழி சேரும் அரங்கமே—பைம்பொழில்வாய்
சென்னகரான் குன்றான் திருக்குருகை யான்குடந்தைப்
பொன்னகரான் குன்றான் புரம். (2)

குறிப்புரை:- மதிற்புறத்தும், அம்பு அகழி சேரும்-நீர் நிறைந்த அகழி பொருந்தும்; தூணியிலும், அம் பகழி சேரும் - அழகிய பாணங்கள் சேரும்;

பைம்பொழில் வாய் செல் நகர் ஆன்குன்றான்-பசிய சோலையினிடத்து மேகம் சஞ்சரிக்கும் இடபகிரியைஉடையவன்; குடந்தைப் பொன்னகர்-திருக்குடந்தைப் பதி(கும்பகோணம்); குன்றான்-குறையாதவன்; புரம்-பட்டணம்.

கொங்கேய் தடத்துக் குமுதமலர், ஒண்புரிசை,
அங்கேழ் மருவும் அரங்கமே—மங்கா
இருக்கந் தாத்தார், எழிற்கந் தாத்தார்
உருக்கந் தாத்தார் உவப்பு. (3)

குறிப்புரை:- கொங்கு - வாசனை; ஏய்-பொருந்திய; தடம்-தடாகம்; புரிசை-மதில்; குமுதமலர், அம் கேழ் மருவும்-அழகிய நிறத்தைப் பொருந்தும்; புரிசை, அங்கு எழ் மருவும்-மதில்கள் ஏழு அமைந்துள்ள;

இருக்கு-வேதம்; இருக்கு அந்தாத்தார்; எழில் கந்தாத்தார்; கந்தரம்-கழுத்து; உரு கந்தாத்தார்-திருமேனி மேகத்தை யொத்தவர், கந்தரம்-மேகம்.

செம்மைத் தெருவினிலும், சேயிழையார் கைகளிலும்
அம்மனைகள் காணும் அரங்கமே—இம்மகியில்
வில்லாண்டு வந்தார்; விமலன் புதுவையர்கோன்
பல்லாண்டு வந்தார் பதி. (4)

குறிப்புரை:- செம்மை-அழகு; சேயிழையார்-பெண்கள்; தெருவினிலும், அம் மனைகள் காணும்-அழகிய வீடுகள் காணப்பெறும்; கைகளிலும், அம்மனைகள் காணும்-அம்மானைக் காய்கள் காணப் பெறும்;

மகி-பூமி; வில்-கோதண்டம்; வில் ஆண்டு வந்தார் -வில்லால் ஆட்சி செய்து வந்தவர். புதுவையர் கோன் - பெரியாழ்வார்; பல்லாண்டு உவந்தார் - திருப்பல்லாண்டு என்னும் திவ்யப் பிரபந்தத்தை மகிழ்ந்தேற்றுக் கொண்டவர்.

(மூன்று சிலேடை)

சித்திரநற் கோபுரங்கள், செல்வரிலம், மாதரிடை,
அத்தந் திகழும் அரங்கமே—பத்தருளந்
தங்கவிமா னத்தார் தனிச்சீர்ப் பிரணவமாந்
தங்கவிமா னத்தார் தலம். (5)

குறிப்புரை:— கோபுரங்கள், அத்தம் திகழும்-ஹஸ்த நக்ஷத்திரத்தை அளாவிநிற்கும்; செல்வர் இல்லம், அத்தம் திகழும்-பொருட் செல்வத்தாற் பிரகாசிக்கும். மாதர் இடை, அ தந்து இகழும்-(மென்மையினால்) பஞ்சு நூலையும் பழிக்கும்.

பத்தர் உளம் தங்கு அவிமானத்தார்; அவிமானத்தார் - அபிமானத்தை யுடையவர். பிரணவமாம் தங்கம் விமானத்தார் - தங்கமயமான பிரணவாகார விமானத்தை யுடையவர்.

மங்காத பொன்னறையில், மாமணிமின் மாடமதில்
அங்கே தனஞ்சேர் அரங்கமே—இங்கேழு
திண்ணவிடை முன்பொறுத்தார் சிற்றனையால் வற்கலையை
வண்ணவிடை முன்பொறுத்தார் வாழ்வு. (6)

குறிப்புரை:— மங்காத-குறையாத. பொன்னறை-பொக்கிஷம்; பொன்னறையில் அங்கே தனம் சேர்; மின் மாடம் மதில்-மின்னு

கின்ற மாடங்களிலும் மதில்களிலும், அம் கேதனம் சேர்; கேதனம்-கொடி.

எழு திண் அம் விடை-வலிய விருஷபங்கள் ஏழு. நப்பின்னைப்பிராட்டியை மணத்தற்குக் கண்ணன் "ஆனேறேழ் வென்றான்" என்க. முன்பு ஒறுத்தார்-வலிமை யழித்தார்; வற்கலை-மாவுரி; சிற்றன்னை-கைகேயி; வண்ணம் இடைமுன் பொறுத்தார் - அழகிய இடுப்பிலே தரித்தருளினர்;

கஞ்ச மலர்சேர் கழனியிலும், வேளிடத்தும்
அஞ்சம் படுக்கும் அரங்கமே—வஞ்சகர்கள்
வந்திக்கத் தாமதியார் மாநிலத்தில் அன்பரிடம்
சந்திக்கத் தாமதியார் சார்பு. (7)

குறிப்புரை:—கஞ்சம்-தாமரை, கழனி-வயல், வேள்-மன்மதன். கழனியிலும், அஞ்சம்(அன்னம்) படுக்கும்; வேளிடத்தும் அஞ்சு அம்பு அடுக்கும்; அஞ்சு அம்பு-புஷ்ப பாணங்கள் ஐந்து;

வந்திக்க-வணங்க; தாம் மதியார்; தாமதியார் - தாமவிக்க மாட்டார்-விரைந்து எழுந்தருள்வார் என்க.

அங்கமறை யோதுமுதிர் அந்தணரும், ஆடவரும்,
அங்கயனை மானும் அரங்கமே—பொங்கும்
அரங்கிலே சங்கெடுத்தான் ஐவருக்க நேகந்
தரங்கிலே சங்கெடுத்தான் சார்பு. (8)

குறிப்புரை:— அங்கம் மறை-ஆறங்கங்களையும் நான்கு வேதங்களையும்; முதிர் அந்தணர்-அறிவான்முதிர்ந்த வேதியர்: அந்தணரும்-அங்கு அயனை மானும்-பிரமதேவனை ஒக்கும். ஆடவரும், அங்கயனை மானும்: அங்கயன்-அங்கசன்-மன்மதன்.

அரங்கம்-யுத்தரங்கம்-போர்க்களம்; சங்கு எடுத்தான்-பாஞ்சஜன்யத்தை முழக்கியவன்; இஃது பாரதக் கதை: ஐவர்-பாண்டவர்

ஐவர்; அநேகம் தரம் கிலேசம் கெடுத்தான்-பல தடவைகள் துயரங்களைத் தீர்த்தருளியவன், பாண்டவ சகாயன் என்பதூஉம் காண்க.

ஊனமிலா முல்லையரும், ஒண்செல் வருமன்பால்
ஆனை வளர்க்கும் அரங்கமே—தானவரை
கொன்றவிருஞ் செங்கதையான்,கோமகனு வந்துவனஞ்
சென்றவிருஞ் செங்கதையான் சேர்வு. (9)

குறிப்புரை:- ஊனம்-குற்றம்; முல்லையர்-முல்லை நிலத்திற்குரிய ஆயர்; முல்லையரும், மன் பால் ஆனை வளர்க்கும்-மிகுதியும் பாலைத் தரும் பசுவை வளர்க்கும்; செல்வரும், அன்பால், ஆனை (யானை) வளர்க்கும்;

தானவரை - அசுரரை; கொன்று அவிரும் செம் கதையான்-சம்ஹரித்து விளங்குகின்ற இரத்தம் தோய்ந்து சிவந்த கதாயுதத்தை யுடையவன்;கோமகனு வந்து-ஸ்ரீராமனாக அவதரித்து;வனம் சென்ற இரும் செம் கதையான்; இரும் செம் கதை - பெரிய அழகிய வரலாறு - இராமாயணம்.

(நான்கு சிலேடை)

மங்கையர்தம் மார்பு,கரம், வாழுயிர்,மே லோராயுள்,
அங்கஞ் சுகங்கொள் அரங்கமே—இங்கிணையில்
மாசுபத்தி ரைக்கணனர், வண்டா மரைக்கணனர்
மாசுபத்தி ரைக்கணனர் வாழ்வு. (10)

குறிப்புரை:— மார்பு, அம் கஞ்சுகம் (கச்சு) கொள்; கரம், அங்கு, அஞ்சுகம் (கிளியைக்) கொள்; வாழ் உயிர்-சீரங்கத்திலே வாழும் நற்பேறு வாய்த்த உயிர்ப்பிராணிகள்; அங்கம் சுகம் கொள்-தேகாரோக்கியத்தைப் பொருந்தும்; மேலோர் ஆயுள்-ஞானிகளின் பிராயம், அங்கு அஞ்சு உகம் கொள்; அஞ்சு-ஐந்து; உகம்-யுகம்.

இணை-உவமை; மா சுபத்திரைக்கு அணனர், மா-அழகு, அணனர்-அண்ணனர்; வண்தாமரை கணனர், கணனர்-கண்ணனர்

(கண்ணையுடையவர்); மா சுபம் திரை கணனர்-பெரிய மங்களகரமான க்ஷீராப்தியையுடைய கண்ணபிரானர். கண்ணனர்-(கடல்) இடமாகக் கொண்டவர்.

(மூன்று சிலேடை)

பொன்னர் புரிசைகளும், பூம்பொழிலும், நீரகமும்,
அன்னகை மேவும் அரங்கமே—ஒன்னருக்(கு)
அஞ்சாம கானத்தான், அன்றடைந்த கானத்தான்,
அஞ்சாம கானத்தான் ஆர்வு. (11)

குறிப்புரை:— புரிசை-மதில், பொழில்-சோலை, அகழ்-மதிலைச் சூழ்ந்த கிடங்கு; புரிசைகளும், அம், நாகம் மேவும்-வானத்தை அளாவும். புரிசைகள் மலையை ஒக்கும் எனவுமாம். பொழிலும், அம் நாகம் மேவும் - அழகிய புன்னை மரங்களைப் பெற்றிருக்கும்; அகழும், அ நாகம் மேவும்: நாகம் - பாம்பு. சர்ப்ப லோகமாகிய பாதாளமுமாம். "அந்நாகம்"-எதுகை நயம் நோக்கி "அன்னகம்" என வந்தது.

ஒன்னர் - பகைவர்; அஞ்சா மகான் நத்தான், மகான்-பெரியோன், நத்தான்-சங்கையேந்தியவன், நந்து-சங்கு, வலித்தல் விகாரம் பெற்றது; கானத்தான்-காட்டையுடையவன்; அம் சாம கானத்தான்-அழகிய சாமவேத கீதத்தையுடையவன்.

பண்டை வயலிற் பயிரிடுமுன் னும்,பின் னும்
அண்டசங்கள் வைகும் அரங்கமே—கண்டகர்க்குத்
தாங்கைச் சரசமன்னர் தண்புதுவை மான்கமலத்
தேங்கைச் சரசமன்னர் சேர்வு. (12)

குறிப்புரை:— பயிரிடுமுன்னும், அண்டு அசங்கள் வைகும்-நெருங்கிய ஆடுகள் தங்கும். வயலில் உரத்திற்காக ஆட்டுக்கிடைகள் வைத்தல் வழக்கம். பயிரிட்ட பின்னும், அண்டசங்கள் வைகும்; அண்டசம்-பறவை.

கண்டகர்க்கு தாம் கைச்ச ரஸம் அன்னர். கண்டகர்-அசுரர், துஷ்டர். கைச்ச-'கைத்த' என்பதன் போலி. புதுவைமான்-ஆண்டாள். கமலம் தேம் கை சாஸம் மன்னர். மன்னர்-ரங்க மன்னர்.

சிங்கார நல்வணிகர், செல்வர் துயிலிடங்கள்
அங்காடி மேவும் அரங்கமே—வெங்கானிற்
சேர்ந்தவிர தத்தினர் திண்விசயன் சாரதியா
ஊர்ந்தவிர தத்தினர் ஊர். (13)

குறிப்புரை:— வணிகர் அங்காடி மேவும். அங்காடி-கடைவீதி. துயிலிடங்கள் அங்கு ஆடி மேவும். ஆடி-நிலைக்கண்ணாடி.

வெம் கானில் சேர்ந்த விரதத்தினர். விரதத்தையுடையவர், விரதத்தினர். இஃது இராமாவதாரத்தில் நிகழ்ந்தது. விசயன்-அருச்சுனன். ஊர்ந்த இரதத்தினர். இரதத்தையுடையவர், இரதத்தினர். இஃது கிருஷ்ணவதாரத்தில் நிகழ்ந்தது.

வாசமுறு யோகியரும், வாழ்த்து மறையொலியும்
ஆசை யகலும் அரங்கமே—வாசவுரங்
கூடுதிருப் பாவையினன் கோதையெனுஞ் சோழியப்பெண்
பாடுதிருப் பாவையினன் பற்று. (14)

குறிப்புரை:— யோகியரும் ஆசை அகலும். ஆசை-மூவாசைகள். மறையொலியும் ஆசை அகலும்-வேத கோஷமும் திக்குகளை வியாபிக்கும்.

உரம் வாசம் கூடு திருப்பாவையினன் - திருமார்பின்கண் வசித்தலைப் பொருந்திய திருமகளாகிய அழகிய பெண்ணையுடையவன். கோதை எனும் சோழியப் பெண்-ஆண்டாள். சோழியப் பெண்-சோழியர் குலத்திலுத்த பெண். பாடு திருப்பாவையினன்-பாடிய திருப்பாவை யென்னும் திவ்வியப் பிரபந்தத்தையுடையவன். பற்று-விரும்புமிடம்.

(மூன்று சிலேடை)

வாழுமட வார்கரம்,தேர், வண்கா விரிநதி,பொன்
ஆழி மருவும் அரங்கமே—பாழிமிகும்
தானவரை முன்பரித்தார் தண்டடத்தில் அன்றழைத்த
தானவரை முன்பரித்தார் சார்பு. (15)

குறிப்புரை:— மடவார் கரம், பொன் ஆழி (தங்க மோதிரம்) மேவும். தேர், பொன் ஆழி(அழகிய சக்கரங்களை) மேவும். நதி, பொன் ஆழி(திருமகள் பிறந்த கடலை) மேவும்.

பாழி-வலிமை. தானவரை முன்பு அரித்தார்-அசுரரை வலியழித்தார்; முற்காலத்திற் சங்கரித்தார் என்றுமாம். தண் தடத்தில் அன்று அழைத்த தான வரை-கஜேந்திரன்; தானம் வரை-மத ஜலத்தைச் சொரிகின்ற மலையாகிய யானை. முன் பரித்தார்-அந்நாளில் காத்தருளினர்.

மங்குல்தவழ் சோலையிலும், மாளிகைசார் பஞ்சரத்தும்
அங்கிளைகள் மேவும் அரங்கமே—பொங்கும்
பயமா மலைக்குடையான் பண்டாயரேத்து
நயமா மலைக்குடையான் நாடு. (16)

குறிப்புரை:— மங்குல் - மேகம்; சோலையிலும் அம் கிளைகள் (கொப்புகள்) மேவும். பஞ்சரம்-கூடு (கிளிக்கூண்டு). பஞ்சரத்தும் அம் கிளைகள் (கிளை-கிள்ளை-கிளி) மேவும்.

பயமாம் அலைக்கு உடையான் - திருப்பாற் கடலுக்கு உரிமையுடையவன். பயம்-பால். அலை-கடல். ஆயர்-இடையர்: நயம் மா மலை குடையான்; நயம்-அழகு. கோவர்த்தன கிரியைக் குடையாக உடையவன்.

வஞ்சியர்தங் கண்ணிணையும், மாடமுறு மந்திரமும்
அஞ்சனங்க ளாரும் அரங்கமே—தஞ்சிகையில்

தோய்ந்தகலா பத்தார் துகள்மா தூலனுன்முன்
வாய்ந்தகலா பத்தார் மனே. (17)

குறிப்புரை:- வஞ்சியர்-வஞ்சிக் கொடி போன்ற மகளிர்; கண்ணிணை-இரண்டு கண். மந்திரம்-மாளிகை. கண்ணிணையும், அஞ்சனங்கள் (மை) ஆரும் (பொருந்தும்). மந்திரமும் அம் சனங்கள் (ஜனங்கள்) ஆரும் (நிறையும்).

சிகை-குஞ்சி. தோய்ந்த கலாபத்தார்-அணியப்பெற்ற மயிலிறகையுடையவர். மாதுலனுல்-கம்ஸனுல், முன் வாய்ந்து அகல் ஆபத்தார்-முதலில் ஏற்பட்டுப் பின் எளிதில் நீங்கிய ஆபத்துக்களையுடையவர்.

தங்கநெடுங் கேதனமும், சாரும் பலதருவும்
அங்கனியோ டேயும் அரங்கமே—துங்க
அருவரைமுன் னங்கெடுத்தார் அன்றுமல்ல ரான
இருவரைமுன் னங்கெடுத்தார் இல். (18)

குறிப்புரை:- கேதனம்-துகிற்கொடி. கேதனமும் அம் கனியோடு(கன்யா ராசியோடு); தருவும், அ கனியோடு (பழங்களுடன்) ஏயும்.

துங்கம்-உயர்வு; வரை-கோவர்த்தன கிரி; முன் அங்கு எடுத்தார்; எடுத்தார்-குடையாகப் பிடித்தவர். மல்லர் இருவர்-முஷ்டிகன், சாணூரன். இருவரை முன்னம் கெடுத்தார்(சம்ஹரித்தவர்).

பேரா விலங்கையர்கோன், பீமனளன் நேர்மடையர்
ஆரா தனஞ்செய் அரங்கமே—சீராயர்
வின்மந் திரமுடையார் வெண்ணெயுண்டா ரென்ஞான்றும்
தன்மந் திரமுடையார் சார்பு. (19)

குறிப்புரை;- பேரா-அழியாத. இலங்கையர்கோன்-வீடணன். இலங்கையர்கோன் ஆராதனம் செய். பீமன் நளன் நேர் மடையர்.

மடையர் - மடைப்பள்ளிக்காரர். பீமன் நளன் இருவரும் பாக சாஸ்திர விற்பன்னர். ஆராதனம்-திருவமுது வகைகள்.

வில்-ஒளி. மந்திரம்-வீடு. முடை(நாற்றம்) ஆர் வெண்ணெய் உண்டார். தன்மம்-தர்மம். திரம் உடையார்-ஸ்திரமாக உடையவர்.

(நான்கு சிலேடை)

ஓங்குபெருஞ் செல்வர், ஒண்மஞ்சம், காவிரி, நெல்
ஆங்குதிரை மேவும் அரங்கமே—பூங்கமல
வாசமா தங்கத்தான் வந்தருள்மா தங்கத்தான்
வாசமா தங்கத்தான் வாழ்வு. (20)

குறிப்புரை:– செல்வர், ஆம் குதிரை மேவும்; ஒண் மஞ்சம், ஆங்கு திரை(திரைச் சீலை) மேவும்; காவிரி, ஆங்கு திரை(அலை) மேவும்; நெல், ஆம் குதிர் ஐ மேவும். குதிர் - நெல்லைச் சேமித்து வைக்கும் குலுக்கை.

பூ கமலம் வாசம் மாது அங்கத்தான்-அழகிய தாமரையில் வாழும் திருமகளை மார்பிற் கொண்டவன். வந்து அருள் மாதங்கத்தான் - இரங்கிக் காத்தருளப் பெற்ற கஜேந்திரனை யுடையவன். வாசம் (வஸ்திரம்) மா தங்கத்தான் — அழகிய பீதாம்பரத்தை யுடையவன்.

(மூன்று சிலேடை)

மச்சமுறும் பண்ணை, மதவா ரணம், இரதம்
அச்சங் கடரும் அரங்கமே — இச்சைகொளும்
அம்பவள வாயினன் அம்புதியில் மீனுருவா
அம்பவள வாயினன் ஆர்வு. (21)

குறிப்புரை:– பண்ணை, அ சங்கு அடரும் (நெருங்கும்). மத வாரணம் (மதயானை), அச்சங்கள் தரும். இரதம், அச்சு அங்கு அடரும்.

அம் பவளம் வாயினன். அம்புதி - கடல். மீனுரு - மச்சாவதாரம், அம்பு அ அளவு ஆயினன்-தண்ணீரின் அளவாய் வளர்ந்தருளியவன்.

வாம்பரிசெல் வீதி, வணிகரும், நூல் ஆய்வோரும்
ஆம்பொருளை யெண்ணும் அரங்கமே—சாம்பன்கைக்
காவனவின் முன்பொசித்தான் அன்றமுது மாவிதுரன்
பாவனவின் முன்பொசித்தான் பற்று. (22)

குறிப்புரை:— வாம் பரி செல் வீதி-தாவுகின்ற குதிரைகள் செல்லுகின்ற வீதிகளில். வீதிகளில் வணிகரும், ஆம் பொருளை எண்ணும்-தேடும் பொருளை ஒன்று, இரண்டு என எண்ணுகின்ற. வீதிகளில், நூல் ஆய்வோரும், ஆம் பொருளை எண்ணும்-நூலிற் பொருந்திய விழுமிய கருத்துக்களைச் சிந்திக்கின்ற.

சாம்பன்-சிவன். கைக்கு ஆ வன வில் முன்பு ஒசித்தான். வனம்-அழகு. ஒசித்தல் - முறித்தல். ராமாவதாரத்தில் சீதையை மணத்தற்குச் சிவதனுசை முறித்தவனென்க. மா விதுரன் பாவன (பரிசுத்தமான) இல்முன், அன்று அமுதுபொசித்தான் (புசித்தவன்).

ஊரிலுறும் பொன்னளியும், ஊடுமட வாரணியும்
ஆரமதில் மின்னும் அரங்கமே—சேரன்
விருத்தங்க ளுள்ளான் மெல்லடிபோற் றுதார்
வருத்தங்க ளுள்ளான் மனை. (23)

குறிப்புரை:— பொன் அளியும் -அழகிய வண்டுகளும், ஆரம் அதில் மின்னும் - ஆடவரும் மகளிரும் அணிந்த பூமாலைகளிலே விளங்கும். மடவார் அணியும், ஆர மதில் மின்னும் - மிகுதியாக மதில்களிலே பிரகாசிக்கும்.

சேரன் விருத்தங்கள் உள்ளான் - குலசேகர ஆழ்வாருளிய பெருமாள் திருமொழியாகிய விருத்தப்பாக்களின்கண் எழுந்தருளியவன், வருத்தங்கள் உள்ளான் (நினையாதவன்).

செம்பொனெடுங் கோட்டைகளும், திண்தனுக்கை வேட்டுவரும்
அம்புலியை நாடும் அரங்கமே—உம்பர்
உரகமட மானார் ஒருங்கே யுவப்ப
வரகமட மானார் மனை. (24)

குறிப்புரை:— கோட்டைகளும், அம்புலியை நாடும்-சந்திரனை யளாவும். வேட்டுவரும், அம் புலியை நாடும் (தேடித்திரியும்).

உரக மட மானார் - நாக கன்னியர். உம்பரும், மானாரும் ஒருங்கே உவப்ப; வர கமடம் ஆனார் - மேன்மை வாய்ந்த கூர்மாவதாரம் எடுத்தருளியவர். கமடம் - ஆமை.

(மூன்று சிலேடை)

தம்புரத்தில் ஆசையற்றோர், சார்ந்தகொடி, கோபுரங்கள்
அம்பரமே ஞடும் அரங்கமே—வம்புமலர்க்
காமனைக்கண் முன்னட்டான் கையேற் பொழித்தான்விண்
காமனைக்கண் முன்னட்டான் காப்பு. (25)

குறிப்புரை:— தம் புரம் - தம் சரீரம். ஆசையற்றோர் - தவ முனிவர். அம் பரம் மேல் நாடும் - அழகிய பரலோகத்தின்மேல் விருப்பத்தைச் செலுத்துகின்ற. கொடி, அம்பரம்(துணி) மேல் நாடும். கோபுரங்கள், அம்பரம்(ஆகாயம்) மேல் நாடும்.

வம்பு-வாசனை. காமனை கண் முன் அட்டான் - மன்மதனை நெற்றிக் கண்ணினுற் சுட்டெரித்தவன்-சிவன், கை ஏற்பு-கையினுல் யாசித்தல்; விண் கா-பாரிஜாத விருக்ஷம். மனை கண்முன் நட்டான்-சத்தியபாமாவின் வீட்டின் முன் நட்டருளியவன்.

எறிரதப் பொன்னேமி, ஏர்விரசைக் காவிரியாம்
ஆறச் சுழிமே வரங்கமே—பேறுமிகும்
தேசங் கமழிசையார் சீர்ப்பாவார் வேய்தனில்வாய்
வாசங் கமழிசையார் வாழ்வு. (26)

குறிப்புரை;— ஏறு இரதப் பொன் நேமி(உருளை), ஆறு அச்சு உழி மேவு - வழிகளில் அச்சின் கண் மேவு; காவிரியாம் ஆறு அசுழி மேவு.

தேசு அங்கம் மழிசையார்-திருமழிசை யாழ்வார். வேய்-மூங்கில். வாய் வாசம் கமழ் இசையார்-வேணுகானத்தையுடையவர்.

சாலத் திகழ்மணத்துத் தையலர்கை யும்,பொழிலும்
ஆலத்தி காணும் அரங்கமே—பாலத்
துருவனைமுன் னங்களித்தார் தொல்வீ டணனைச்
செருவனைமுன் னங்களித்தார் சேர்வு. (27)

குறிப்புரை:— சால - மிகுதியாக. தையலர் கையும், ஆலத்தி (நீராஞ்சனம்) காணும். பொழிலும் ஆல் அத்தி காணும். ஆல் அத்தி-மரவகைகள்.

பாலத் துருவனை முன்னம் களித்தார். செரு வனைமுன் (போர் புரிவதன் முன்பு) அங்கு வீடணனை அளித்தார் (அபய மளித்து ரட்சித்தவர்).

காரணமுன் னூலினரும், காமுகரும், என்றுஞ்சீர்
ஆரணங்கைக் கொள்ளும் அரங்கமே—பாரளந்து
பீனவடி வானார் பிரமற்குக் காட்டினார்
ஏனவடி வானார் இடம். (28)

குறிப்புரை:-- முன்னூலினர் - பழமையான சாஸ்திரங்களை யுணர்ந்த பெரியோர். நூலினரும், என்றும் சீர் ஆரணம்(வேதம்) கைக் கொள்ளும். காமுகரும் என்றும் சீர் ஆரணங்கை(அழகிய மகளிரை) கொள்ளும்.

பீன அடி வான் ஆர் பிரமற்குக் காட்டினார் - பெரிதான தம் திருவடியைச் சத்தியலோகத்திற் பொருந்திய பிரமதேவனுக்குக் காட்டியருளியவர். ஏனவடிவு (வராகாவதாரம்) ஆனார்.

வந்தனமே செய்யவரும் மன்னவரும், வீணைகளும்
அந்தந்தி மேவும் அரங்கமே—சிந்துபதி
மாண்டவன்வா னாகவத்தான் வாழக் கதிர்மறைத்தான்
தாண்டவன்வா னாகவத்தான் சார்பு. (29)

குறிப்புரை:-- மன்னவரும் அம் தந்தி(யானை) மேவும். வீணைகளும் அம் தந்தி(நரம்பு) மேவும்.

சிந்துபதி-ஜயத்திரதன். தாண்டவன்-சிவன். மாண்டு அவன் வான்ஆக(இறக்க), அத்தான் (அத்தையின் புத்திரனான அருச்சுனன்) வாழ, கதிர்மறைத்தான்-சக்கரத்தால் சூரியனை மறைத்தருளியவன், வான் ஆகவம்-பெரிய யுத்தம், பாணாசுர யுத்தம். ஆகவத்தான்-யுத்தத்தை யுடையவன்.

(நான்கு சிலேடை)

பொங்கேரி, யிக்குவனம், பூந்தண் டலை,வீதி
அங்கே கயஞ்சேர் அரங்கமே—செங்கீதை
ஓர்விசையன் பாற்பணித்தார் உற்றானுந் தாமென்றே
ஓர்விசையன் பாற்பணித்தார் ஊர். (30)

குறிப்புரை:— பொங்கு எரி, அங்கே கயம்(ஆழம்) சேர்; இக்கு வனம், அங்கே கயம்(யானை) சேர்; பூந்தண்டலை(பூஞ்சோலையில்), அம் கேகயம்(மயில்) சேர்; வீதி, அங்கு எகு அயம்(குதிரை) சேர்.

செம் கீதை - சிறப்பு வாய்ந்த (பகவத்) கீதையென்னும் நூல். பணித்தார் உற்றான்-சர்ப்பாபரணங்களையுடைய சிவன். ஒப்பற்ற விஜயனுக்கு, அன்பால், "ருத்ராணாம் சங்கரச் சாஸ்மி" (நான் ருத்திரனுக்குள்ளே சங்கரனாகின்றேன்) என்று கீதோபதேசம் புரிந்தவன். ஓர்விசை-ஒருதடவை.

(மூன்று சிலேடை)

பம்புவரிநெல், பருந்தரளம், காவேரி
அம்பணைவாய் மேவும் அரங்கமே—நம்பியே

பண்டழைத்த வாரணத்தார், பாணிதனில் வாரணத்தார்
பண்டழைத்த வாரணத்தார் பற்று. (31)

குறிப்புரை:— நெல், அம் பணை(வயல்) வாய்மேவும்; தாளம் (முத்து); அம் பணை(மூங்கில்) வாய்(கணு) மேவும்; காவேரி அம்பு (ஜலம்), அணைவாய்(அணைக்கட்டுகளின் மதகுகளில்) மேவும்.

பண்டு அழைத்த வாரணம்-கஜேந்திரன்; பாணி-திருக்கரம்; வாரணம்-மூங்கில் - புல்லாங்குழல்; பண் தழைத்த ஆரணம் - சாம வேதம். பண்டு அழைத்த வாரணத்தார்; பண் தழைத்த ஆரணத் தார் எனப் பிரித்துக் கொள்க.

வாரணிந்த கொங்கை மடவார் விழி,சாயல்
ஆருமயின் மானும் அரங்கமே—நேரில்
அருகமல வுந்தியினன் அன்றயனை யீன்ற
ஒருகமல வுந்தியினன் ஊர். (32)

குறிப்புரை:— வார்-கச்சு. மடவார்விழி, ஆரும் அயில்(வேல்) மானும்; மடவார் சாயல், ஆரும் மயில் மானும்.

நேர்இல்-நிகரற்ற; அருகு அமல உந்தியினன்-சமீபத்தில் (இரு பாலும்) பரிசுத்த நதியை உடையவன்; உந்தி-நதி; ஒரு கமல உந்தியினன்-ஒப்பற்ற நாபீகமலத்தை யுடையவன்.

தும்பை புனையரசர் தூணிகள்,மின் னாரளகம்
அம்பதிக நேரும் அரங்கமே—வம்புமலர்த்
தாதுதிரு மாலையார் தாசரடித் தூளாழ்வார்
ஓதுதிரு மாலையார் ஊர். (33)

குறிப்புரை:- தும்பை-போர்க்குச்செல்லுவோர் அணியும் மாலை; தூணி-அம்புப் புட்டில்; தூணிகள் அம்பு அதிகம் நேரும் (பொருந் தும்). மின்னார் (பெண்கள்) அளகம் (கூந்தல்), அம் (அழகிய) பதிகம் (சைவலம், நீர்ப்பாசி) நேரும் (ஒக்கும்).

வம்பு-வாசனை; தாது உதிரும் மாலையார்-மகரந்தம் சிந்துகின்ற துளப மாலையை யுடையவர்; தாசர் அடித்தூள் ஆழ்வார் - தொண்டரடிப்பொடி யாழ்வார். ஓது திரு மாலையார்; திருமாலை-பிரபந்தம்.

தூய மறையாளர், சொல்லின்ப நாவலர்,சீ
ராய மகஞ்செய் அரங்கமே—பேயினது
கொங்கையங் கஞ்சுவைத்தார் கொற்றம் பெறுபடைகள்
செங்கையங் கஞ்சுவைத்தார் சேர்வு. (34)

குறிப்புரை:— மறையாளர், சீராய மகம்(யாகம்) செய்; நாவலர்-சீராய் யமகம்(ஒருவிதச் சொல்லணி) செய்.

கொங்கை அங்கம் (ஸ்தன மாகிய வுறுப்பை) சுவைத்தார்; கொற்றம் - வெற்றி. செங்கை அங்கு...படைகள் அஞ்சு (ஐந்து) வைத்தார்.

(மூன்று சிலேடை)

மங்கலநற் பாலிகைகள், மாந்தர், இரும்புரவி
அங்குராங்கண் மேவும் அரங்கமே—செங்கமல
மாதுவச மன்புள்ளார் வானவருங் கண்டுதொழு
மாதுவச மன்புள்ளார் வாழ்வு. (35)

குறிப்புரை:— பாலிகை-முளைப்பாலிகை. பாலிகைகள், அங்குரங்கள் (முளைகளை) மேவும்; மாந்தர், அங்கு உரம்(வலிமை) கண் மேவும்; புரவி, அம் குரங்கள் (குரம்-குளம்பு) மேவும்.

செம் கமல மாது வசம் அன்பு உள்ளார். மா துவசம்(அழகிய கொடியாக) மன் புள்ளார்-பக்ஷி ராஜனாகிய கருடனையுடையவர்.

சீரார்பொன் கொள்வோரும், தேர்புலவ ரும்,கலையே
ஆராய்ந் துரைசெய் அரங்கமே—வாரார்
முரசங்கன் றாதினன் மோதா கவத்தில்
வரசங்கன் றாதினன் வாழ்வு. (36)

குறிப்புரை:— பொன் கொள்வோரும், கலையே (கல்லே-கலை, உரைகல்லை) ஆராய்ந்து உரைசெய்(உரைத்துப் பார்க்கின்ற); தேர் புலவரும், கலையே(சாஸ்திரங்களையே) ஆராய்ந்து உரைசெய் - சம் பாஷிக்கின்ற.

முரசு அங்கன் தூதினன்-முரசுக் கொடியை யுடைய தருமனுக் காகக் கௌரவரிடம் தூது சென்றவன். ஆகவம் - போர்; மோது ஆகவத்தில் வரசங்கு (மேன்மையான பாஞ்ச ஜான்யம்) அன்று ஊதினன்.

சாலைதனில் தீம்பலவைச் சாடுகுரங் குங்,கரும்பும்
ஆலை மருவும் அரங்கமே—வாலிதனைத்
துஞ்சக் கரந்தரித்தான் தொண்டரையே காப்பதற்காச்
செஞ்சக் கரந்தரித்தான் சேர்வு. (37)

குறிப்புரை:-தீம் பலவை-தித்திப்பான பலாமரத்தை; குரங்கும், ஆலை(ஆலமரத்தை) மருவும். கரும்பும், ஆலை(இயந்திரத்தை)மருவும்.

வாலிதனை துஞ்ச கரந்து அரித்தான். தொண்டரையே காப்பதற்கா செம் சக்கரம் தரித்தான். துஞ்ச - சாக; கரந்து-மறைந்து; அரித்தான்-அழித்தவன். தரித்தான் - தாங்கியவன்.

ஊகமுற்ற வேதியரும், உட்டதிசேர் தாழியு,மோர்
ஆகமத்தைக் கொள்ளும் அரங்கமே—மாகரிக்கு
மோக்கந் தரத்தான் முனம்வந் திடங்கருயிர்
போக்கந் தரத்தான் புரம். (38)

குறிப்புரை:- ஊகம்-யூகம்-ஞானம்; வேதியரும் ஓர் ஆகமத்தைக் கொள்ளும். உள் ததி (தயிர்) சேர் தாழியும், மோராக மத்தைக் கொள்ளும்.

மாகரி - கஜேந்திரன். மா கரிக்கு மோக்கம் (மோக்ஷம்) தர தான் முனம் (முன்னே) வந்து, இடங்கர் (முதலை) உயிர் போக்கு அந்தரத்தான் (ஆகாய மார்க்கத்தை யுடையவன்.)

கொம்பார் தருக்களிலும், கூடுதிரை வாவியிலும்,
அம்பார்ப்பு மேவும் அரங்கமே—நம்பாணர்
பாட்டினைமுன் கேட்டார் பகையரசர் பாலைவர்
நாட்டினைமுன் கேட்டார் நகர். (39)

குறிப்புரை:- கொம்பு (கிளை) ஆர் தருக்களிலும், அம் பார்ப்பு (அழகிய பறவைக் குஞ்சு) மேவம். திரை(அலை) கூடு வாவியிலும் (தடாகத்திலும்), அம்பு ஆர்ப்பு(ஜலத்தின் ஆரவாரம்) மேவும்.

பாணர் - திருப்பாணாழ்வார்; பாட்டினை முன்(முற்காலத்தில்) கேட்டார் (திருச்செவியின் மாந்தினவர்). பகை அரசர்(கௌரவர்) பால், ஐவர் (பாண்டவர்) நாட்டினை முன் (முன் நின்று) கேட்டார் (இரந்தவர்).

(நான்கு சிலேடை)

அங்கனையார் மார்பு,கயம், அந்தணர்கை, நூலுணர்வோர்
அங்குசத்தைக் கொள்ளும் அரங்கமே—வெங்கபடர்
பாலார் கலியுடையார் பைம்பொன் கலியுடையார்
பாலார் கலியுடையார் பற்று. (40)

குறிப்புரை:- அங்கனையார்(பெண்கள்) மார்பு, அம் குசத்தை (குசம்-ஸ்தனம்) கொள்ளும்; கயம்(யானை), அங்குசத்தை(தோட்டி யென்னும் யானை அடக்குங் கருவியை) கொள்ளும். அந்தணர் கை, அம் குசத்தை(தர்ப்பையை) கொள்ளும். நூல் உணர்வோர், அங்கு சத்தை(ஸத்து-ஸாரம்) கொள்ளும்.

வெம் கபடர்(வஞ்சகர்) பால், ஆர்(நிறைந்த) கலி(பாவத்தை) உடையார் (தகரார்). பைம்பொன் கலி (வஸ்திரம்-பீதாம்பரம்) உடையார். உடையார் - உடையாகத் தரித்தவர். பால் ஆர்கலி (கடல்) உடையார்.

(மூன்று சிலேடை)

பூமேவு கான்மதகு, பூங்குழலார் ஆகம்,உளம்
ஆமோதஞ் சாரும் அரங்கமே—சீமூத

வண்ணத்தா னாகத்தான் மாயத்தா னேயத்தான்
வண்ணத்தா னாகத்தான் வாழ்வு. (41)

குறிப்புரை:— கால்-ஆற்றுக்கால்; மதகு, ஆம் ஓதம்(நீரின் ஒலி) சாரும். பூங்குழலார் ஆகம், ஆமோதம் (பரிமளம்) சாரும். உளம், ஆமோதம்(சந்தோஷம்) சாரும்.

சீமூதம் வண்ணத்தான்-மேகவர்ணத்தையுடையவன். நாகத்தான் - பரமபதத்தை யுடையவன்; வண் நத்தான் - அழகிய சங்கை யேந்தியவன். நாகத்தான்-ஆதிசேஷனை யுடையவன்.

கும்புபொறி வண்டு,மணிக் குண்டலங்கள், மாதரார்
அம்புயத்து மின்னும் அரங்கமே—கொம்பனையார்
அற்பரதத் துக்கினியான் ஆசைகொளா தாட்கொள்வான்
நற்பரதத் துக்கினியான் நாடு. (42)

குறிப்புரை:— கும்பு - கும்பல். வண்டு, மாதர் (அழகு) ஆர் அம்புயத்து(தாமரையினிடத்து) மின்னும். மணி குண்டலங்கள், மாதரார்(பெண்களின்) அம் புயத்து (தோள்களில்) மின்னும்.

கொம்பனையார் - மகளிர்; அற்ப ரதத்துக்கு-சிற்றின்பத்திற்கு, இனி யான் ஆசை கொளாது ஆட்கொள்பவன்; நல் பரதத்துக்கு (பரத நாட்டியத்திற்கு) இனியான் (இனிமை உடையவன்.)

மங்காத வெப்பொருளும், மாமணஞ்செய் வோரகமும்
அங்கா வணஞ்சேர் அரங்கமே—இங்கார்ந்தோர்
வாசமருந் தாணினர் வந்துதொழ வார்த்துவந்த
தேசமருந் தாணினர் சேர்வு (43)

குறிப்புரை:— எப்பொருளும், அங்கு ஆவணம் (கடை வீதி) சேர்; மா மணம் செய்வோர் அகமும், அம் காவணம் (பந்தர்) சேர்;

வாசம் மருந்து ஊணினர் - மணம் பொருந்திய அமிர்தத்தை உண்டோராகிய தேவர்; ஆர்த்து வந்தது, நரசிங்காவதாரத்தில். தேசு அமரும் தூணினர்-ஒளி பொருந்திய மணித் தூணையுடையவர்.

தாண்டுவராற் பண்ணைகளும், சன்மவுயிர் யாவுஞ்,சீர்
ஆண்டுமுத்திக் கேயும் அரங்கமே—பாண்டவன்பாற்
கட்டுப்பட் டாவிளைத்தான் காவெனத்து ரோபதைக்குப்
பட்டுப்பட் டாவிளைத்தான் பற்று. (44)

குறிப்புரை:- பண்ணைகளும் - வயல்களும்; ஆண்டு சீர் முத்து இக்கு எயும் - அவ்விடத்து அழகிய முத்துக்களைச் சொரியும் கரும்பு களைப் பொருந்தும். சன்ம உயிர் யாவும், (இகத்தில்), சீர் ஆண்டு (சிறப்புக்களை யநுபவித்துப் பின்) முத்திக்கு(மோக்ஷத்திற்கு) எயும் (பக்குவத்தை யடையும்).

பாண்டவன்-சகாதேவன்; கட்டுப் பட்டு ஆ(உயிர்) இளைத்தான் (மெலிவுற்றவன்); 'கா' என - 'காப்பாற்றுவாய்' என்று அரற்ற; பட்டு பட்டா விளைத்தான்-பட்டு உடைகளை ஒன்றன்பின் ஒன்றாக விளைந்து கொண்டேயிருக்கும்படி அருள் செய்தவன்.

(மூன்று சிலேடை)

சேருமதற் கம்புமலர், தேங்குழலார், கஞ்ச,மிறை
ஆருமஞ்சஞ் சாரும் அரங்கமே—வீரவிற்பூ
அம்புருவ நோக்கினன் அன்றேழ் மரந்துளைத்தவ்
வம்புருவ நோக்கினன் வாழ்வு. (45)

குறிப்புரை:- மதற்கு-மன்மதனுக்கு; அம்புமலர்-புஷ்பபாணம்; இறை ஆரும் அஞ்சு அஞ்சு ஆரும் - கடவுளர் எவரும் அஞ்சத்தக்க (பாணம்) ஐந்து பொருந்தும். தேங்குழலார் (மகளிர்), இறை (கணவன்) ஆரும் மஞ்சம் (ஸப்ரமஞ்சம்) சாரும். கஞ்சம் (தாமரை) இறை (சிறகு) ஆரும் அஞ்சம் (அன்னம்) சாரும்.

வீரவில்-வீரம் பொருந்திய வில்லையும், பூ-தாமரைப் பூவையும், (முறையே உவமையாகக் கொண்ட) அம் புருவம், நோக்கினன்- அழகிய புருவத்தையும், கண்ணையும் உடையவன்: அன்று - இராமாவதார காலத்தில்; எழ்மரம் துளைத்து அவ் அம்பு உருவ (ஊடுருவிச் செல்ல) நோக்கினன்.

கங்குலிலே காமுகர்கள், காவலர்பால் நாவலர்கள்
அங்கணிகை மேவும் அரங்கமே—பொங்கமரில்
நாணுதலின் மான்மதத்தார் நால்வாயின் கோடிடந்தார்
வாணுதலின் மான்மதத்தார் வாழ்வு. (46)

குறிப்புரை:- காமுகர்கள், அம் கணிகை (வேசியை) மேவும். நாவலர்கள், அங்கு காவலர்பால், அணிகை(ஆபரணங்களை) மேவும்- அடையும்.

நாணுதல் இல் மால் மதத்து ஆர் நால்வாயின் (குவலயாபீடம் என்னும் யானையின்) கோடு இடந்தார் (தந்தத்தை முறித்தருளியவர்); வாள் நுதலில்(நெற்றியில்) மான்மதத்தார்(கஸ்தூரி திலகத்தையுடையவர்). மான்மதம்-கஸ்தூரி.

தேசு மணிமாடம், சீர்மாரன் பாணி,மலர்
ஆசுகங்க ணீங்கா அரங்கமே—காசிபனில்
வாய்ந்தவட பத்திரத்தான் மாவா மனனானன்
ஏய்ந்தவட பத்திரத்தான் இல். (47)

குறிப்புரை:- மாடம், மலர் ஆசுகம் (பூங்காற்று) கண் நீங்கா. மாரன்(மன்மதன்) பாணி(கை), மலர்ஆசுகங்கள்(புஷ்ப பாணங்கள்) நீங்கா.

காசிபன் இல்(மனைவியாக) வாய்ந்தவள்(அதிதி) தபம் திரத்தால் (வலிமையால்), மா வாமனன் (வாமனாவதாரம்) ஆனான். ஏய்ந்த வட பத்திரத்தான் (வடபத்திரம் - ஆலிலை, ஆலிலைப் பள்ளியுடையவன்).

மாற னடியாராம் வைணவர்நா மம்,பொன்னி
ஆறிரண்டாங் காணும் அரங்கமே—தேறியணை
ஆய்மா தரங்கத்தார் ஆநந்த மாத்துயில
வாய்மா தரங்கத்தார் வாழ்வு. (48)

குறிப்புரை:— மாறன்(மால் தன்)அடியாராம் வைணவர்(இடும்) நாமம் (திருமண் காப்பு) ஆறிரண்டு (பன்னிரண்டு); ஸ்ரீவைணவர் துவாதசோர்த்துவ புண்டரமாகத் திருமண் தரிப்பர். பொன்னி ஆறு (காவேரி நதி) இரண்டா (இரண்டு கிளையாக, கொள்ளிடம் காவேரி என்னுமிரண் டாருக).

அணை ஆய் மாதர் (கோபிகா ஸ்திரீகள்) அங்கத்தார்(சரீரத்தை யுடையவர்), ஆநந்தமா துயில வாய் (பொருந்திய) மா தரங்கத்தார் (திருப்பாற் கடலையுடையவர்).

தற்பரனை யெண்ணித் தவம்புரிவோர், நாலுணர்வோர்
அற்பகலை யோரா அரங்கமே—பொற்பணிகள்
பூண்டவியப் பண்ணினர் பூபார மன்னவரை
மாண்டவியப் பண்ணினர் வாழ்வு. (49)

குறிப்புரை:— தற்பரன்-சர்வேஸ்வரன். தவம்புரிவோர், அல் பகலை ஓரா-இரவென்றும் பகலென்றும் உணராத; நூலுணர்வோர், அற்ப(சொற்பமான) கலை(சாஸ்திரங்களை)ஓரா(ஆராய்ச்சிசெய்யாத); மிகுதியான சாஸ்திரங்களை ஆராய்வர் என்க.

பொன்பணிகள் பூண்ட வியப்பு அண்ணினர்(பொருந்தியவர்), பூபார மன்னவரை - பூமிக்குப் பாரமாகப் பொருந்திய அரசரை, மாண்டு அவிய (பாரத யுத்தத்திலே இறந்தொழிய) பண்ணினர் (செய்தவர்).

(நான்கு சிலேடை)

எப்புறத்தும், மாமரத்தும், ஏரியிலும், பாடிடத்தும்
அப்பணிலஞ் சேரும் அரங்கமே—இப்புவியோர்

உண்ணம் பலத்தார் உடன்பலத்தார் முன்சவரி
உண்ணம் பலத்தார் உவப்பு. (50)

குறிப்புரை:— எப்புறத்தும், அப்பு அண் நிலம் (நீர்வளம் பொருந்திய நன்செய்கள்) சேரும். மா மரத்தும், அப்பு அணிலம் (பற்றுகின்ற அணில்கள்) சேரும். ஏரியிலும், அ பணிலம் (சங்கு) சேரும். பாடிடத்தும், அ ப(ண்)ணில் அம் (அழகு) சேரும்.

உள் நம்பு அலத்தார் (அலம் - கலப்பை, அலத்தார் - கலப்பை ஏந்தியவர்; பலராமர்) உடன், பலத்தார் - சகோதர பலமாக வுடையவர். முன் சவரி உண் அம் பலத்தார் (பழத்தை யுடையவர்).

(மூன்று சிலேடை)

கொண்டனிகர் பூங்குழலார் கொங்கை,யிதழ், நற்றெரு,பொன்
அண்டுவரை யொப்பாம் அரங்கமே—பண்டு
படுகளமுன் சேதித்தார்ப் பார்த்திபன்முத் தாரம்
படுகளமுன் சேதித்தார் பற்று. (51)

குறிப்புரை:— கொண்டல் நிகர்-மேகத்தையொத்த. கொங்கை, பொன் அண்டு வரை (மேரு மலையை) ஒப்பாம். இதழ், பொன் அண் துவரை (அழகு வாய்ந்த பவளத்தை) ஒப்பாம். நல் தெரு, பொன் அண் துவரை (லக்ஷ்மீகரம் பொருந்திய துவாரகாபுரியை) ஒப்பாம்.

படுகளம் முன் (ரண களத்தில்), சேதி தார் பார்த்திபன் (சிசுபாலனது) முத்தாரம் படு களம் (முத்துமாலை யணிந்த கழுத்தை) முன் சேதித்தார் (அறுத்தருளியவர்).

சுத்தமணி மேடையில்,நால் சொல்வோர், தினமணியால்
அத்தமன மோரும் அரங்கமே—பத்தன்
தருமவலை யுண்ணோரார் தண்கரத்தார் என்னைக்
கருமவலை யுண்ணோரார் காப்பு. (52)

குறிப்புரை:— சுத்தமணி-குற்றமற்ற இரத்தினம். மேடையில், தினமணியால் (சூரியனால், கடிகாரத்தால்) அத்தமனம் (அஸ்தமனம்) ஒரும்; நூல் சொல்வோர், தினம் அணியால் (அலங்கார சாஸ்திரத்தால்) அத்தம் (பொருள், நூற் கருத்துக்களை) மனம் ஒரும்.

பத்தன் (குசேலன்) தரும் அவலை உண் ஏர் (அழகு) ஆர் தண் கரத்தார்; என்னை கருமவலையுள் சேரார் (பொருந்தச் செய்யாதவர்).

வீசுதிரைக் காவிரியும், மின்னாருந் தங்கொழுநர்க்
காசைமுத்த நல்கும் அரங்கமே—வாசமலர்க்
கையிற் கலப்பையுளான் காதலிளை யோன்போற்றார்
மெய்யிற் கலப்பையுளான் வீடு. (53)

குறிப்புரை:— காவிரியும், ஆசை (திக்குகளிலெல்லாம்) முத்தம் (முத்துக்களை) நல்கும்; மின்னாரும் (மகளிரும்) தம் கொழுநர்க்கு ஆசை முத்தம் (அன்பு கனிந்த முத்தங்கள்) நல்கும்.

கையில் கலப்பை உ(ள்)ளான் (பலராமன்) காதல் இளையோன். போற்றார் மெய்யில் (சரீரத்தில்) கலப்பை (சேர்ந்திருத்தலை) உ(ள்)ளான்-விரும்பாதவன்.

பூண்டபுகழ் மன்னவரும், புத்தே ளிரும்,வலமா
ஆண்டு வருநல் அரங்கமே—வேண்டும்
விரகாலன் பாவார் மிளிருமுனை வேற்கைப்
பரகாலன் பாவார் பதி. (54)

குறிப்புரை:— மன்னவரும், வலமா (வெற்றியாக) ஆண்டுவரும் (அரசாட்சி செய்யும்); புத்தேளிரும் (கடவுளரும்) ஆண்டு வலமா (பிரதக்ஷிணமாக) வரும்.

வேண்டும் விரகால் (பிரார்த்திக்கின்ற உபாயத்தினாலே) அன்பு ஆவார்; மிளிரும் முனை (கூர்மை) வேல் கை பரகாலன் (திருமங்கையாழ்வார்) பாவார் (திருப்பாசுரங்களை யுடையவர்).

(மூன்று சிலேடை)

மஞ்சு தவழ் மாடம், மகவான், இகல்வீரர்
அஞ்சசியோ டேயும் அரங்கமே—வஞ்சகர்பால்
மெய்யான வன்பிலான் மேதினி நூற் றெண்பதிக்குள்
மெய்யான வன்பிலான் வீடு. (55)

குறிப்புரை:— மஞ்சு - மேகம். மாடம், அம் சசி (சந்திரன்) யோடு ஏயும்; மகவான் (இந்திரன்) அம் சசி (இந்திராணி)யோடு ஏயும்; இகல் (வலிமை) வீரர், அஞ்சு அசி(வாள்)யோடு ஏயும்.

மெய்(சரீரம்) ஆன அன்பு இ(ல்)லான். மேதினி-பூமி. நூற்றெண்பதி - நூற்றெட்டுத் திவ்ய தேசங்கள். மெய்யான - உண்மையான(அழிவிலாத), அன்பிலான் -'அன்பில்' என்னும் திவ்ய தேசத்தை யுடையவன்.

நம்பாரி லில்லறத்தை நாடினரும், குஞ்சரமும்
அம்பாரி மேவும் அரங்கமே—வெம்பாந்தள்
ஏந்த லமளியார் எண்ணார்க்கு வைகுந்தந்
தாந்த லமளியார் சார்பு. (56)

குறிப்புரை:— நாடினர் - விரும்பினவர், அம் (அழகிய) பாரி (பத்தினி) மேவும்; குஞ்சரமும்(யானையும்), அம்பாரி மேவும்.

பாந்தள் -பாம்பு; பாந்தள் ஏந்தல்(ஆதிசேடன்); அமளி(படுக்கை எண்ணார்க்கு தாம் வைகுந்தம் தலம் அளியார்.

கொங்குமலர்ப் பூங்குழலார் கொங்கையிலும்,வீதியிலும்
அங்களபஞ் சாரும் அரங்கமே—எங்குமவன்
தன்றிருப் பேரையான் சாற்றிடினும் இன்னருள்செய்
தென்றிருப் பேரையான் சேர்வு. (57)

குறிப்புரை:- கொங்கையிலும் அம் களபம் (கலவைச் சந்தனம்) சாரும்; வீதியிலும். அம் களபம் (யானைக்குட்டி) சாரும்.

எங்கும் அவன்தன் திருப்பேரை(திருநாமத்தை) சாற்றிடினும், இன் அருள்செய் தென் திருப் பேரையான். தென் திருப்பேரை- நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று; ஆசிரியாது ஜன்ம தேசமும் அதுவே.

நந்தாப் பெருஞ்செல்வர் நன்மனையும், நாவலரும்
அந்தாதி காணும் அரங்கமே—நந்தார்கை
நங்கோ வியர்க்கொண்ணார் நாயகர்தம் மேலெழுத
இங்கோ வியர்க்கொண்ணார் இல். (58)

குறிப்புரை:- நன்மனையும் (அழகிய மாளிகைகளும்), அம் தாதி (பணிப்பெண்டிர்) காணும். நாவலரும் அந்தாதி (ஒருவகைப் பிரபந்தம்) காணும்.

நந்து (சங்கு வளை) ஆர் கை நம் கோவியர்க்கு (கோபிகா ஸ்திரீகளுக்கு ஒண் (பிரகாசமான) நார் (அன்பு) நாயகர்; தம் வர் எழுத இங்கு ஓவியர்க்கு (சித்திரக்காரருக்கு) ஒண்ணார் (இயலாதவர்). ஓவியத்து எழுதவொண்ணு உருவத்தார் என்க.

வாதமிடு பண்டிதரும், மாமயிலும், என்றுமதி
யாதரவைக் கோரும் அரங்கமே—காதவுணர்
ஊனின் மணவாளர் ஓங்கு வளப்புதுவை
மானின் மணவாளர் வாழ்வு. (59)

குறிப்புரை:- பண்டிதரும், என்றும் மதி (மதிக்கத் தக்க), ஆதரவை (துணையை) கோரும் (விரும்பும்). கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்க. மாமயிலும், என்றும் மதியாது அரவை(பாம்பை) கோரும் (அலகிலே கொத்திக் கோர்த்துத் திரியும்).

காது (மோதுகின்ற). அவுணர் (அசுரர்)ஊனின் மணம் வாளர் (தசை நாற்றம் பொருந்திய நாந்தகம் என்னும் வாளை யேந்தியவர்), புதுவை மான் - ஸ்ரீ ஆண்டாள்; மணவாளர் - கணவர்.

(நான்கு சிலேடை)

சங்கமடு, மாமருகு, சான்றோர்த முள்ள,மிடை
அங்கலைக ளாரும் அரங்கமே—மங்கைநல்லார்
அந்தப் புரத்தார் அநந்தபுரத் தார்திருவாழ்
அந்தப் புரத்தார் அகம். (60)

குறிப்புரை:- சங்கம் மடு, அங்கு அலைகள் ஆரும்; மா மருகு, அம் கலைகள்(மான்கள்) ஆரும்; சான்றோர்தம் உள்ளம், அம் கலைகள் (சாஸ்திரங்கள்) ஆரும்; இடை (அவர்களின் இடுப்பு) அம் கலைகள் (வஸ்திரங்கள்) ஆரும்.

அந்தப்புரம் - ராஜஸ்திரீகள் வாழுமிடம். அநந்தபுரம் - திருவநந்தபுரம். திரு (இலக்குமி) வாழ் அந்த (அழகிய) புரத்தார்- சரீரத்தை யுடையவர்.

(மூன்று சிலேடை)

வம்புமலர்த் தண்டலையும், மாநதியும், கெண்டைகளும்
அம்புளின மேவும் அரங்கமே—நம்பும்
அரியமா மண்டலத்தா ராராலு மெண்ணற்(கு)
அரியமா மண்டலத்தா ரார்வு. (61)

குறிப்புரை:- வம்பு-வாசனை; தண்டலை-சோலை. தண்டலையும், அம் புள் இனம் மேவும். நதியும் அம் புளினம் (மணல் மேடுகள்) மேவும். கெண்டைகளும், அம்புள் (நீரினுள்) இனம் (கூட்டமாக) மேவும்.

அரியமா - சூரியன். சூரிய மண்டலத்தின் நடுவில் எழுந்தருளியவர் என்க. மா மண் (பெரிய பூமியினிடத்து) எண்ணற்கு அரிய தலத்தார் (பல ஸ்தலங்களை யுடையவர்).

மாசிடர் தம்மிடத்தும், மன்றுளும்,நா லாரியர்,முன்
ஆசிர்வா தஞ்செய் யரங்கமே—மாசிற்ற

வாசித் திருந்தார் மனங்கொதிப்ப வீடணனை
நேசித் திருந்தார் நிலம். (62)

குறிப்புரை:— நூலாரியர், மாசீடர் தம்மிடத்தும் முன் ஆசீர் வாதம் செய்; நூலாரியர், மன்றுளும்(சபைகளினிடத்தும்) முன்னு (சிந்தித்து) சீர்(சிறப்பான) வாதம் செய்;

மாசீற்றம் வாசி(குதிரைப் படையுடைய) திருந்தார்(பகைவர்) மனம் கொதிப்ப, வீடணனை நேசித்து இருந்தார்.

காம்பு மலர்களிலும், கந்தரஞ்சேர் சோலையிலும்
ஆம்பிரம ரஞ்சேர் அரங்கமே—வாம்பிறைநீர்
வாசஞ்செய் யச்சடையான் மாவரங்கொள் தானவரை
நாசஞ்செய் யச்சடையான் நாடு. (63)

குறிப்புரை:— மலர்களிலும், ஆம் பிரமரம் (வண்டு) சேர்; கந்தரம்-மேகம். சோலையிலும் ஆம்பிர மரம் (தேமாமரம்) சேர்.

வாம் பிறை நீர் வாசம் செய் அ சடையான் (சடாபாரத்தை யுடைய சிவன்); தானவரை நாசம் செய்ய சடையான் (சலிப்படையான்).

சங்காருங் கையார் தனங்களிலும், வேதியிலும்
அங்கார மேவும் அரங்கமே—சிங்காரப்
பூவின் மகிழ்மாறன் போற்றுதிரு வாய்மொழியாம்
பாவின் மகிழ்மாறன் பற்று. (64)

குறிப்புரை:— சங்கு - சங்க வளையல். தனங்களிலும், அங்கு ஆரம் மேவும். வேதியிலும் (யாக மேடையிலும்), அங்காரம் (தீக் கனல்) மேவும்.

மகிழ் மாறன்-வகுளமாலையையுடைய நம்மாழ்வார். திருவாய் மொழியாம் பாவில் மகிழ் (சந்தோஷிக்கின்ற) மால் தன்.

(மூன்று சிலேடை)

செப்பார்ந்த மென்முலையார் சீர்விழி,சொல், காவேரி
அப்பா னலங்காட் டரங்கமே—இப்பாரில்
அங்கதனைப் பெற்றான் அமர்க்களத்தி லேதுதிக்க
அங்கதனைப் பெற்றான் அகம். (65)

குறிப்புரை:– சீர்விழி, அ பானல்(நீலோற்பலமலர்) அம்(அழகு) காட்டு; சொல், பால் நலம் காட்டு; காவேரி அப்பால் (தன் தீர்த்த மகிமையால், மூழ்குவோர்க்கு) நலம் (மோட்சம்) காட்டு.

அங்கதனைப் பெற்றான் (வாலி), அதனை (தான் விரும்பிய மோக்ஷத்தை) பெற்றான் (அடையச் செய்தவன்).

சீர்மருவு சாதகமும், திண்ணியவா விக்கரையும்
ஆர்மழைக்கங் காக்கும் அரங்கமே—ஓர்மருங்கில்
தங்கநக வில்லான் தனைவைத்தான் அன்பரக
அங்கநக வில்லான் அகம். (66)

குறிப்புரை:– சாதகமும் (சாதகபட்சியும்), ஆர் மழைக்கு அங் காக்கும்(அண்ணாந்திருக்கும்); வாவிக்கரையும், ஆர் மழை கம்(ஜலம்) காக்கும்.

மருங்கில் - பாகத்தில், தங்கம் நகம் (பொன்மலை, மேருமலை) வில்லான் (சிவன்); சிவனைத் தனது ஒரு பாகத்தில் வைத்தவன். அன்பர் அகம் அங்கு அநக இல்லான். அநக இல் - தோஷ மற்ற வீடு. 'அம் கனக இல்லான்' எனப் பிரித்து அழகிய பொன் மயமான வீட்டை யுடையவன் எனவும் பொருள்படும்.

நல்ல கதிரினையே, நாற்புறத்துப் பண்ணைகளும்
அல்லிறைவ னுங்காட் டரங்கமே—கல்லினைமுன்
நாரிவடி வாக்கினான் நன்னயமா மின்னமுத
வாரிவடி வாக்கினான் வாழ்வு. (67)

நாற்புறத்து பண்ணைகளும் (வயல்களும்) நல்ல கதிரினையே (நெற்கதிர்களையே) காட்டு; அல் இறைவனும் (சந்திரனும்) நல்ல கதிரினையே (கிரணங்களையே) காட்டு.

நாரி-பெண் (அகலிகை). நாரி வடிவு ஆக்கினன்; இன் அமுத வாரி (கடல்) வடி வாக்கினன்.

மங்குலெனுங் கூந்தல் மடவார் களமிருகண்
அங்கம்பு மானும் அரங்கமே—பொங்கும்
பயவே லையைமதித்தான் பார்த்தன்தே ரோட்டும்
நயவே லையைமதித்தான் நாடு. (68)

குறிப்புரை:- மடவார் களம்(கழுத்து) அம் கம்பு(சங்கு)மானும். மடவார் இருகண் அங்கு அம்பு மானும்.

பய வேலையை மதித்தான் - பாற்கடலைக் கடைந்தான். நய வேலையை மதித்தான்-அழகிய தொழிலைப் பெரிதாகக்கொண்டான்.

மிக்கார் திருமொழியும், மேவுமரன் கந்தரமும்
அக்கார நேரும் அரங்கமே—தக்கார்
திருநாட் டிருப்பினர் செத்தவனை யாசாற்
றொருநாட் டிருப்பினர் ஊர். (69)

குறிப்புரை:— மிக்கார் - அழகு மிக்க மகளிர். திரு மொழியும், அக்காரம் (வெல்லப் பாகு) நேரும் (ஒக்கும்). அரன் கந்தரமும் (கழுத்தும்), அக்கு ஆரம் நேரும் - உருத்திராட்ச மாலைகளைப் பொருந்தும்.

தக்கார் திருநாட்டு இருப்பினர் - முக்தர்கள் வாழும் பரம பதத்திலெழுந்தருளியவர். ஆசான்-சாந்தீபினி. செத்தவன்-அச் சாந்தீபினியின் குமாரன். ஒருநாள் - ஒரு காலத்தில். திருப்பினர் - உயிருடன் மீளச் செய்தவர்.

(நான்கு சிலேடை)

செம்மைவிழி யார்,வேந்தர், சீரியர்நூல், மாமாடம்
அம்மணிகள் மேவும் அரங்கமே—தம்மனையை
ஆகத் திருத்தினன் அச்சாந்தக் கூனியைநேர்
ஆகத் திருத்தினன் ஆர்வு. (70)

குறிப்புரை:- செம்மை விழியார் - அழகிய கண்களையுடைய மகளிர், அம் அணிகள்(ஆபரணங்கள்) மேவும்; வேந்தர் அம் அணிகள் (படைகள்); சீரியர் நூல், அம் அணிகள்(அலங்காரங்கள்) மேவும்; மா மாடம், அம் மணிகள்(நவரத்தினங்கள், கடிகாரங்கள்).

மனையை - லக்ஷ்மீதேவியை, ஆகத்து(மார்பில்) இருத்தினன்; நேர் ஆக திருத்தினன் - கூன் நிமிர்ந்து நேராம்படி திருந்தச் செய்தவன்.

(மூன்று சிலேடை)

ஈகையரும், பாடகரும், வத்தவரு மைங்கரனும்
ஆகுமிசை யாரும் அரங்கமே—சாகரமாப்
பாவருணை னேங்கடுத்தார் பைந்தமிழ்ப்ப ராங்குசனார்
பாவருணை னக்கடுத்தார் பற்று. (71)

குறிப்புரை:- ஈகையரும் - கொடையாளிகளும், ஆகும் இசை (புகழ்) ஆரும்; பாடகரும், ஆகும் (இராகம்) ஆரும்; ஐங்கரனும்-விநாயகனும், ஆகு(பெருச்சாளி) மிசை ஆரும்.

சாகரமா பா வருணனை - கடல் வடிவாய்ப் பரவியுள்ள வருண தேவனை, கடுத்தார்-கோபித்தவர்; பராங்குசனார் - நம்மாழ்வார்; பா வருணனைக்கு அடுத்தார்.

தப்பிதமில் லாரிடத்தும், சந்திரப்பேர் வாவியினும்
அப்புநிதம் நீங்கா அரங்கமே—இப்புவியிற்
போர்கா தவனத்தார் பூம்பொழிற்றென் பேரையில்வாழ்
வார்கா தவனத்தார் வாழ்வு. (72)

குறிப்புரை:- தப்பிதம் இல்லாரிடத்தும், அபுநிதம்(பரிசுத்தம்) நீங்கா; சந்திரப்பேர் வாவி (சந்திர புஷ்கரணி)யிலும், அப்பு நிதம் நீங்கா;

போர் காது (மோது) உவணத்தார் (கருட வாகனத்தையுடையவர்); தென்பேரை - தென்திருப்பேரை. வார் காது வ(ண்)ணத்தார்-மகர நெடுங் குழைக்காதர்.

மஞ்சார் பொழில்தனிலும், மன்னர் மருங்கினிலும்
அஞ்சா மரைசேர் அரங்கமே—துஞ்சாச்சீர்
பொய்கையார் பாற்கவியார் போதநல்லார் தாம்பழிக்குஞ்
செய்கையார் பாற்கவியார் சேர்வு. (73)

குறிப்புரை:- பொழில்தனிலும், அஞ்சா மரை (மான்) சேர்; மன்னர் மருங்கினிலும், அம் சாமரை சேர்.

பொய்கையார்—பொய்கை யாழ்வார். பால் கவியார் - பால் போலும் இனிய கவியை யுடையவர். செய்கையார் பால் கவியார் (மனம் கவியாதவர்).

கொம்புவளர் மாமரத்தும், கோயில் தெருக்களிலும்
அம்பலங்கள் காணும் அரங்கமே—கும்பமுனி
ஆச்சிரமத் தொன்றினன் அம்புதியை முன்கடைந்த
மாச்சிரமத் தொன்றினன் வாழ்வு. (74)

குறிப்புரை:- மாமரத்தும், அம் பலங்கள் (கனிகள்) காணும். தெருக்களிலும் அம்பலங்கள் (மன்றங்கள்) காணும்.

கும்பமுனி—அகத்தியன். ஆச்சிரமத்து-பர்ணசாலையில், ஒன்றினன் - ஸ்ரீராமனுகத் தங்கியவன். அம்புதி-கடல். மா சிர மத்து ஒன்றினன் - பெரிய சிகரங்களை யுடைய மந்தர மலையாகிய மத்து ஒன்றை யுடையவன்.

(மூன்று சிலேடை)

ஏற்றினினம், புள்ளினினம், ஏரார் வராலினினம்,
ஆற்றலை மன்னும் அரங்கமே—போற்றமரார்க்(கு)
இட்டமருந் தாரத்தர் ஏடுபொருந் தாரத்தர்
இட்டமருந் தாரத்தர் இல். (75)

குறிப்புரை:—ஏற்றின் இனம், ஆற்றலை (வலிமையை); புள்ளின் இனம், ஆல் தலை (ஆல மரத்தில்); வராலின் இனம், ஆற்று அலை மன்னும்.

அமரார்க்கு இட்ட மருந்து(அமிர்தம்) ஆர் அத்தர்(திருக்கரத்தை யுடைவர்); ஏடு பொருந்து ஆரத்தர் - பூவிதழ்கள் பொருந்திய மாலையை யுடையவர். இட்ட (இஷ்ட) அரும் தாரத்தர்-அரிய பிரிய நாயகியை யுடையவர்.

பாரில் விளையாடும் பாலரும்,பார்ப் பாரு,மணல்
ஆரிடத்தை நாடும் அரங்கமே—போரைத்
தொடுத்த விராவணனர் தொல்லிளையோன் போற்றப்
படுத்த விராவணனர் பற்று. (76)

குறிப்புரை:- பாலரும், மணல் ஆர் இடத்தை நாடும். பார்ப் பாரும், அ(ண்)ணல் ஆரிடத்தை (ஆர்ஷம்-வேதம்) நாடும்.

இராவணனர் தொல் இளையோன் - விபீஷணன். படுத்த - ஸ்ரீரங்கத்திலே திருப்பள்ளிகொண் டருளுகின்ற; இரா வ(ண்)ண ஞர்—இரவுபோலும் கறுமை நிறத்தை யுடையவர்.

பூமாட்டுச் சந்தைகளிற், பூரணகும் பங்களிற்சீர்
ஆமா விலைகொள் அரங்கமே—தேமாலை
அக்கனுடன் முன்பிசைந்தார் அம்புயமுற் றூரமர்க்கு
நக்கனுடன் முன்பிசைந்தார் நாடு. (77)

குறிப்புரை:- சந்தைகளில், சீர் - அழகிய, ஆ - பசு, மா விலை கொள்; பூரண கும்பங்களில் சீர் ஆம் மாவிலை கொள்;

அக்கன் - அட்சன், இராவணனது குமாரன். அக்கன் உடல் முன் பிசைந்தார் - அனுமார். அநுமனது அழகிய தோளில் ஆரோகணிப்பவர். அநுமன் - சிறிய திருவடி. அமர் - பாணாசுர யுத்தம். நக்கன் - சிவன். நக்கனுடன் முன்பு அமர்க்கு இசைந்தார்.

தண்டடநற் கோயிலையும், தாழித் ததியினையும்
அண்டர் மதிக்கும் அரங்கமே—அண்டினிமை
ஓங்குதிரைக் கந்தரத்தார் ஒண்புவியிற் பின்புகிக்கும்
வாங்குதிரைக் கந்தரத்தார் வாழ்வு. (78)

குறிப்புரை:- தண் தடம் நல் கோயிலையும், அண்டர் மதிக்கும் - தேவர் போற்றுகின்ற. தாழி ததியினையும் (தயிரையும்), அண்டர் மதிக்கும் - இடையர் கடைகின்ற.

இனிமை ஓங்கு திரைக்கு (திருப்பாற் கடலுக்கு) அந்தரத்தார்; பின்பு - இனி, வருங்காலத்தில்; வாம் குதிரை - தாவும் குதிரை; கந்தரத்தார் - கழுத்தை யுடையவர். தசாவதாரங்களிற் கடைசி, கற்கி யவதாரம். கற்கி யவதாரம் - திருமாலின் ஹயக்ரீவ மூர்த்தம். *ஹயக்ரீவம் - குதிரைக் கழுத்து.

கோங்கமையும் சோலையிலும், கோதில் நாரிடத்தும்
ஆங்குதரு மஞ்சார் அரங்கமே—ஓங்கிசையாற்
பேருக்கு வித்தான் பெருங்கா லயவனனை
நீருக்கு வித்தான் நிலம். (79)

குறிப்புரை:- சோலையிலும், ஆங்கு தரு (தருவில்) மஞ்சு ஆர்; கோது - குற்றம்; நாரிடத்தும் ஆங்கு தருமம் சார். தரு மஞ்சு - மழையைத் தரும் மேகம் எனவும் ஆம்.

---

* இவ்வாசிரியர், தாமியற்றிய 'தனிப்பா மஞ்சரி' (33-ம் பக்கம்)யில் "வாசித் தலைமருவும் மால்" எனத் திருமாலைக் குறித்துப் பாடியுள்ளார். வாசித்தலை—குதிரைத் தலை.

இசையால் பேறு ஆ(பசுக்கூட்டம்)குவித்தான். காலயவனன் - ஓர் அசுரன். நீறு ஆக்குவித்தான். முசுகுந்தச் சக்கரவர்த்தியைக் கொண்டு திருமால் காலயவனனைக் கொன்றொழித்தான்.

(நான்கு சிலேடை)

தேங்குழலார் மெய்யு,மிலும், செய்களிலும், பொன்னியிலும்
ஆங்கலங்கள் மேவும் அரங்கமே—தூங்குமிடம்
அந்தரங்க மோதுவா ரம்புதியார் பூமகளார்க்(கு)
அந்தரங்க மோதுவா ரார்வு. (80)

குறிப்புரை:- தேங்குழலார் - மகளிர்; மெய்யும், ஆம் கலங்கள் (ஆபரணங்கள்) மேவும். இ(ல்)லும்; ஆம் கலங்கள் (பாத்திரங்கள்) மேவும். செய்களிலும், ஆங்கு அலங்கள் (கலப்பைகள்) மேவும். பொன்னியிலும், ஆம் கலங்கள் (தோணிகள்) மேவும்.

அம் தரங்கம் (அலை) மோது வார் அம்புதியார். அம்புதி-கடல். பூமகளார்க்கு அந்தரங்கம் ஓதுவார். பூமகளார் - சீதேவி பூதேவி ஆகிய இரு தேவியர்.

(மூன்று சிலேடை)

மையணிகண் ணார்கை, மருங்கு, மருத்துவர்கள்
ஐயங் கொடுக்கும் அரங்கமே—வெய்யவிடக்
கண்டத்தா னம்புயத்தான் காண்பரியா னிப்பரத
கண்டத்தான் அம்புயத்தான் காப்பு. (81)

குறிப்புரை:- மை அணி கண்ணார் கை, ஐயம் (பிச்சை) கொடுக்கும். மருங்கு ஐயம் (சந்தேகம்) கொடுக்கும்; உண்டோ இல்லையோ என்று சொல்லும்படி நுட்பமாக இருக்கும். "பொய்யோ எனும் இடை" என்க. மருத்துவர்கள் ஐ (கபம்) அங்கு ஒடுக்கும்.

வெய்ய விடக் கண்டத்தான் (விஷந்தங்கிய கழுத்தை யுடைய சிவன்), அம்புயத்தான் (பிரமன்) காண்பரியான்; இ பரத கண்டத்

தான். பூவுலகம் முழுமைக்கும் தலைவன் என்றாலும், பரத கண்டத்திற்கு மாத்திரம் சிறப்பாக அமைந்த தலைவன். அம் (அழகிய) புயத்தான் (திருத்தோள்களை யுடையவன்).

ஒப்புமடைப் பள்ளியிலும், ஊச லமளியிலும்
அப்பஞ் சமைக்கும் அரங்கமே—இப்புவனம்
உண்டதிரு நாவாயார் உற்றகுகன் நாவாயார்
வண்டதிரு நாவாயார் வாழ்வு. (82)

குறிப்புரை:- மடைப் பள்ளியிலும் அப்பம் சமைக்கும். ஊசல் அமளி (படுக்கையிலும்), அ பஞ்சு அமைக்கும்.

புவனம் - பூமி. உண்ட திரு (அழகிய) நா வாயார் (நாவுடன் கூடிய வாயையுடையவர்). குகனது நாவாயார் (தோணியையுடையவர்). வண்டு அதிரும் நாவாயார்-சங்கு முழங்கும் 'திருநாவாய்' என்னும் திவ்ய தேசத்தை யுடையவர்.

மங்காப் புறநகரில், வாசிவரு வீதிகளில்
அங்கா விலகும் அரங்கமே—சிங்காரப்
பூதத்தார் மாகவியார் பொற்கலைமு கத்துநட்ட
சீதத்தார் மாகவியார் சேர்வு. (83)

குறிப்புரை:- புறநகரில், அம் கா (சோலை) இலகும். வாசி (குதிரை) வரு வீதிகளில், அங்கு ஆ விலகும்.

பூதத்தார் - பூதத்தாழ்வார். மா கவியார்—அழகிய பாசுரங்களை யுடையவர். பொன் கலை முகத்து (ருசியமுக பர்வதத்திலே) நட்ட (சிநேகித்த) சீத தார் மா கவியார் (பெருமை வாய்ந்த சுக்கிரீவன் என்னும் வானர வேந்தனை யுடையவன்).

பேதமுறு மெந்தப் பிராணிகளும், இல்லு,மதி
யாதிரையை நாடும் அரங்கமே—கோதை
மணவாள ராக்கொண்டார் வாய்ந்தவனர் தூங்கப்
பணவாள ராக்கொண்டார் பற்று. (84)

குறிப்புரை:-எந்தப் பிராணிகளும், மதியாது இரையை நாடும்; இல்லும் - மாளிகைகளும்; மதி - சந்திரன்; ஆதிரை - திருவாதிரை நக்ஷத்திரம்.

கோதை மணவாளர் ஆக்கு ஒண் தார் வாய்ந்த அ(ன்)ணர் — ஆண்டாள் தன் நாயகனுக்குச் செய்வித்தற்காகச் சூடுகின்ற மண மாலையை யுடைய அப்பெருமாள். தாங்க பணம் (படம்) வாள் அரா (பாம்பு) கொண்டார்.

(மூன்று சிலேடை)

கூடுபெருஞ் செல்வர், இலம், கோதில் கடை, காணம்
ஆடகமா டஞ்சேர் அரங்கமே—நாடியுமை
சாரங்க வத்தத்தான் தாமரையான் போற்றுவிறற்
சாரங்க வத்தத்தான் சார்பு. (85)

குறிப்புரை:-செல்வர், காண் அம் ஆடக மாடம்(பொன் மாளிகை) சேர். இ(ல்)லம், காண் அம் ஆடு(மேடராசி) அக மாடம்சேர். கோதில் கடை, காணம்(கொள்ளு) ஆடகம்(துவரை)மாடம் (உளுந்து) சேர்.

உமை சார் அங்க அத்தத்தான்—உமாதேவி பொருந்தப் பெற்ற பாதியுடலை யுடையான், தாமரையான்—பிரமன்; சாரங்க அத்தத் தான்-சாரங்க மென்னும் வில்லையேந்திய கையை யுடையவன்.

பக்கமொடு பாமாலை பார்ப்போரும், மன்னவரும்
அக்கரம்பி ரிக்கும் அரங்கமே—மிக்கபுகழ்
மன்பேயார் தீங்கவியார் வாய்ந்து தமைப்பணியும்
அன்பேயார் தீங்கவியார் ஆர்வு. (86)

குறிப்புரை:- பக்கம்-பட்சம். பாமாலை பார்ப்போரும்-அக்கரம் (அட்சரம்) பிரிக்கும். மன்னரும் அ கரம் (தீர்வை) பிரிக்கும்.

புகழ் மன் (விலைபெற்ற) பேயார் (பேயாழ்வார்) தீம் கவியார் - (தித்திப்பான கவியை யுடையவர்). அன்பு ஏயார்(பொருந்தாத கசடர்) தீங்கு அவியார்.

போற்ற வருவோர் புகைச்சகட்டால், தோணிகளால்
ஆற்றைக் கடக்கும் அரங்கமே—சீற்றமிகும்

துட்டக் கானர் தொலையச் சரந்தொட்ட
எட்டக் கானர் இடம். (87)

குறிப்புரை:- போற்ற வருவோர், புகைச் சகட்டால் (ரயிலாலும்), ஆற்றை (வழியை) கடக்கும்; (அவர்கள்) தோணிகளாலும் ஆற்றை (காவேரி நதியை) கடக்கும்.

துட்டக் கானர் - துஷ்டத்தனம் வாய்ந்த கான் என்னும் அரக்கன். சரம்-பாணம். எட்டு அக்கரனர்-ஸ்ரீ அஷ்டாட்சரத்தையுடையவர்.

நம்புமெழி லாடவரெந் நாளுமிர வும்பகலும்
அம்பரியங் கஞ்சார் அரங்கமே—தம்பமதிற்
பேரரவங் காட்டினர் பீதிதரு மைம்மடுவில்
ஓரரவங் காட்டினர் ஊர். (88)

குறிப்புரை:- ஆடவர், இரவும், அம் பரியங்கம் (கட்டில்) சார்; பகலும், அம் பரி (குதிரை) அங்கம் சார் (சவாரி செய்கின்ற).

தம்பம்-தூண். பேர் அரவம்-பெருத்த ஆரவாரம். பேரரவங் காட்டியது நரசிங்காவதாரத்தில். பீதி - அச்சம். மை மடு-விஷம் பொருந்திய குளம். ஓர் அரவு (காளியன்) அங்கு ஆட்டினர்.

நேர்ந்த விரும்பதரை, நெற்பகர்வோ ரும்புகையே
ஆர்ந்தசக டும்போக் கரங்கமே—சார்ந்தநலை
இந்து வரையார் எழில்வேங் கடவரையார்
நந்து வரையார் நகர். (89)

குறிப்புரை:- நெல் பகர்வோரும், இரும் பதரை (சாவியை) போக்கு; புகையே ஆர்ந்த சகடும் (ரயிலும்) இரும்பு அதரை (இருப்புப்பாதையில்) போக்கு.

இந்து வரை (சந்திர மண்டலம் வரை) ஆர் (பொருந்திய), எழில் வேங்கடவரையார் திருவேங்கட மலையை யுடையவர்; நம் துவரையார். துவரை-துவாரகாபுரி.

(நான்கு சிலேடை)

மிஞ்சுமதன், மன்னவர்கள், வேற்றூரார், பண்ணவர்கள்
அஞ்சத் திரமே வரங்கமே—கஞ்சனென்போன்
ஆரப் புரந்துவைத்தான் அவ்வீ டணனையர(சு)
ஆரப் புரந்துவைத்தான் ஆர்வு. (90)

குறிப்புரை:— மதன், அஞ்சு அத்திரம்(பாணம்) மேவு. மன்னவர்கள், அம் சத்திரம்(குடை) மேவு வேற்றூரார், அம் சத்திரம் (யாத்திரிகர் தங்குமிடம்) மேவு. பண்ணவர்கள் (தேவர்), அம் சத்திரம்(யாகம்) மேவு.

ஆர் அ புரம் (சரீரம்) துவைத்தான் (நசுக்கி யழித்தவன்), வீடணனை அரசு ஆர புரந்து (காப்பாற்றி) வைத்தான் (சிரஞ்ஜீவி யாக்கி வைத்தவன்)

(மூன்று சிலேடை)

தாமப் பொதுவரிலம், தண்வாவி, கோபுரஞ்,சீர்
ஆமை மருவும் அரங்கமே—தாமமெனு
மாவா ரணவரையார் வண்கையி லாழிகஞ்ச
மாவா ரணவரையார் வாழ்வு. (91)

குறிப்புரை:— பொதுவர் இலம் - இடையர் மனை, சீர் ஆ மை (அழகிய பசுக்களும் ஆடுகளும்) மருவும்; தண் வாவி(குளம்), சீர் ஆமை(கமடம்) மருவும்; கோபுரம் சீரா மை(மேகம்) மருவும்.

தாமமெனும்-இருப்பிடமாகிய, வாரணவரை-அத்திகிரி, வண் கையில் ஆழிவரை (சக்கரரேகை), கஞ்சவரை (பத்மரேகை) மா வாரணவரை (சங்கரேகை)யுடையவர்.

பொங்கு மதகரிகள், புள்ளிக் கலையினங்கள்
அங்கரிணி மேனு டரங்கமே—தங்குததி
தொட்டுண்ட கையினர் தூயவனை தார்பதனற்
கட்டுண்ட கையினர் காப்பு. (92)

குறிப்புரை:— மதகரி (யானை)கள், அம் கரிணி(பெண்யானை) மேல் நாடு; புள்ளிக் கலையினங்கள்-புள்ளிமான் கூட்டங்கள் அரிணி (பெண்மான்) மேல் நாடு.

ததி-தயிர். தொட்டு உண்ட கையினர். தூய அ(ன்)னை-யசோதை. தாம்பு-கயிறு. கட்டுண் தகையினர்-கட்டுண்ட பெருமையுடையவர். தாமோதரனர் என்க.

வாணுதலார் சேர்ந்திலகு மஞ்சமதில், மாலைகளும்,
ஆணழக ருந்தூங் கரங்கமே—வாணன்
கரக்கப் பரிந்தார் கனிமா வலிபால்
இரக்கப் பரிந்தார் இடம். (93)

குறிப்புரை:- மஞ்சமதில், மாலைகளும் தூங்கு(தொங்குகின்ற); மஞ்சமதில் ஆண் அழகரும் தூங்கு(துயிலுகின்ற);

வாணன்-பாணுசுரன்; கரம் கப்பு-கைக் கூட்டம். அரிந்தார்-அறுத்தருளியவர்; பாணுசுரனது ஆயிரங் கைகளையும் அறுத்தார் என்க. மாவலி பால் இரக்க(யாசிக்க)பரிந்தார்(மனமுவந்தவர்).

தாண்டு வடவைகளும், தண்பொழில்வாய் மஞ்ஞைகளும்
ஆண்டுரகந் தேடும் அரங்கமே—காண்டவனம்
அங்கிக் களித்தார் அடவியில்நீத் தோரிடத்துத்
தங்கிக் களித்தார் தலம். (94)

குறிப்புரை:- வடவைகளும் (பெண் குதிரைகளும்), ஆண் துரகம்(குதிரை)தேடும். மஞ்ஞைகளும், ஆண்டு உரகம் (பாம்பு)தேடும்.

அங்கி - அக்கினிபகவான். அங்கிக்கு அளித்தார்; அடவியில் (காட்டில்) நீத்தோரிடத்து (முனிவர்களிடத்தில்), (ஸ்ரீராமனுக) தங்கி களித்தார்.

(மூன்று சிலேடை)

தக்கபுரா ணம்படிப்போர், தார்வேந்தர், வேதியர்கை,
அக்கதைகள் மேவும் அரங்கமே—மிக்கவருள்
செய்ய கலம்பகத்தான் சீர்த்தாசன் அன்றுரைத்த
செய்ய கலம்பகத்தான் சேர்வு. (95)

குறிப்புரை:- புராணம் படிப்போர் அ கதைகள்(சரித்திரங்கள்) மேவும். வேந்தர், அ கதைகள்(கதாயுதம்) மேவும். வேதியர்கை, அக்கதைகள்(அட்சதைகள்) மேவும்.

மிக்க அருள்செய் அகல் அம்பகத்தான். அம்பகம்-கண். சீர் தாஸன்-அழகிய மணவாள தாசரென்ற ஸ்ரீ பிள்ளைப்பெருமாளையங்கார். செய்ய கலம்பகத்தான்-திருவரங்கக் கலம்பகம் என்ற அழகிய பிரபந்தத்தை யுடையவன்.

வம்பு மலர்வாவி, மாட முறுமடவார்
அம்பி னலைவாரும் அரங்கமே—பம்புமணச்
சாந்தப் புரத்தார் தரணியிலெப் போர்தனிலும்
தாந்தப் புரத்தார் தலம். (96)

குறிப்புரை:- வம்பு-வாசனை. வாவி, அம்பின் அலைவு ஆரும். மடவார், அம் பி(ன்)னலை வாரும்.

பம்பு (நிறைந்த) மணம் சாந்து அப்பு உரத்தார் (திருமார்பை உடையவர்); தரணி-பூமி; தாம் தப்பு உரத்தார் (வலிமையுடையவர்).

கண்டுமொழி யார்நடனங் காண்போர், வருவிபுதர்
அண்டுறக்கம் விட்ட அரங்கமே—கண்டுதொழா
மானவரு டம்பெய்தார் மாதர் நிரையுவப்பக்
கானவரு டம்பெய்தார் காப்பு. (97)

குறிப்புரை:- கண்டு மொழியார் - கற்கண்டு போலும் இனிய சொல்லையுடைய மகளிர்; நடனம் காண்போர், அண்டு உறக்கம் விட்ட; வரு விபுதர் (தேவர்), அண் (பொருந்திய) துறக்கம் (சுவர்க்கம்)விட்ட.

மானவர் (மானிடர்) உடம்பு எய்தார். மாதர் நிரை - மாதரும் ஆநிரையும். கான வருடம் – வேணுகானமாகிய மழை. கான வருடம் பெய்தார்.

சீரணுகு வேதியர்கள், தேரோடு நல்வீதி
ஆரவா ரம்மோ தரங்கமே—ஏரிறகு
வாய்த்தவிருந் தாவனத்தார் வந்துதொழ வானிரைமுன்
மேய்த்தவிருந் தாவனத்தார் வீடு. (98)

குறிப்புரை:- ஆர(மிகுதியாக) வாரம் ஓது; வீதி ஆரவாரம் மோது. வாரம்-வேதம் ஓதும் ஒருமுறை. ஏர் இறகு வாய்த்து அவிரும் தாவு அனத்தார் - பிரமன், ஆன்நிரை - பசுக் கூட்டம். மேய்த்த விருந்தாவனத்தார் (பிருந்தா வனத்தையுடையவர்).

மண்டலத்து மானிடரும், வண்புட் குழாமுஞ்,சீர்
அண்டத் துதிக்கும் அரங்கமே—அண்டரிலஞ்
சென்றுயரந் தாங்குறியார் தீந்ததியுண் டார்நினையார்
வன்றுயரந் தாங்குறியார் வாழ்வு. (99)

குறிப்புரை:- மானிடரும் சீர் அண்ட துதிக்கும். வண் புள் குழாமும் சீர் அண்டத்து(முட்டையில்) உதிக்கும்.

சென்று உயரம் தாங்கு உறி ஆர்; நினையார் வன் துயரம்தாம் குறியார் (கருதார்).

(ஐந்து சிலேடை)

நம்மா னிடவீரர், நாலுபுறம், சூழி,குயில்,
அம்மா,வின் மேவும் அரங்கமே—வெம்மானெய்
வையமருங் கோலத்தர் மண்ணிடந்த கோலத்தர்
வையமருங் கோலத்தர் வாழ்வு. (100)

குறிப்புரை:- வீரர், அம் மா வில் மேவும். நாலுபுறம், அம் மா இல் மேவும். சூழி, அம் மாவில்(யானையில்) மேவும். அம் மா(திருமகள்), இல் மேவும்.

வெம் மான் (மாரீசன்), எய் வை (கூர்மை) அமரும் கோல் (பாணம்) அத்தர் (திருக்கரத்தை யுடையவர்). மண் இடந்த கோலத்தர்(வராகரூபத்தையுடையவர்). வையம்-பூமியில், அருமை கோலத்தார்-அரிய சௌந்தரியத்தை யுடையவர், அழகர்.

திருவரங்கச் சிலேடை மாலை முற்றும்.

ஸ்ரீ ரங்கநாதன் திருவடிகளே சரணம்!

வாழ்க

# செய்யுள் முதற்குறிப்பகராதி


| முதற் குறிப்பு | பக்க எண் |
|---|---|
| அங்கமறை யோதுமுதிர் | 8 |
| அங்கனையார் மார்புகயம் | 22 |
| அல்லும் பகலும் | 3 |
| இக்கோன் பிதாவாம் | 2 |
| ஈகையரும் பாடகரும் | 35 |
| ஊகமுற்ற வேதியரும் | 21 |
| ஊரிலுறும் பொன்னனி | 15 |
| ஊனமிலா முல்லையரும் | 9 |
| எப்புறத்தும் மாமரத்து | 26 |
| ஏற்றினினம் புள்ளினின | 37 |
| ஏறிரதப் பொன்னேமி | 16 |
| ஒப்புமடைப் பள்ளியிலு | 40 |
| ஓங்குபெருஞ் செல்வர் | 14 |
| கங்குலிலே காமுகர்கள் | 25 |
| கஞ்ச மலர்சேர் | 8 |
| கண்டுமொழி யார்நட- | 45 |
| காம்பு மலர்களிலும் | 32 |
| காரணமுன் னூலினரும் | 17 |
| கும்புபொறி வண்டுமணி | 23 |
| கூடுபெருஞ் செல்வர் | 41 |
| கொங்குமலர்ப் பூங்குழ | 29 |
| கொங்கேய் தடத்துக் | 6 |
| கொண்டணிகர் பூங் | 27 |
| கொம்பார் தருக்களிலும் | 22 |
| கொம்புவளர் மாமரத்து | 36 |
| கோங்கமையுஞ் சோலை | 38 |
| சங்கமடு மாமறுகு | 31 |
| சங்காருங் கையார் | 32 |
| சாலத் திகழ்மணத்துத் | 17 |
| சாலைதனில் தீம்பலவை | 21 |
| சிங்கார நல்வணிகர் | 11 |
| சித்திரநற் கோபுரங்கள் | 7 |
| சீர்மருவு சாதகமும் | 33 |
| சீரங்க மொன்றுங் | 3 |
| சீரணுகு வேதியர்கள் | 45 |
| சீரார்பொன் கொள் | 20 |
| சுத்தமணி மேடையில் | 27 |
| செப்பார்ந்த மென்முலை | 33 |
| செம்பொன் மதிற்புறத் | 6 |
| செம்பொ னெடுங்கோட் | 16 |
| செம்மைத் தெருவினி | 6 |
| செம்மை விழியார் | 35 |
| சென்னிக் கணிமலராம் | 3 |
| சேருமதற் கம்புமலர் | 24 |
| தக்கபுரா ணம்படிப்போ | 44 |
| தங்கநெடுங் கேதனமும் | 13 |
| தண்டடநற் கோயிலையும் | 38 |
| தப்பிதமில் லாரிடத்தும் | 35 |
| தம்புரத்தில் ஆசையற் | 16 |
| தற்பரனை யெண்ணி | 26 |
| தாண்டு வடவைகளும் | 44 |
| தாண்டுவராற் பண்ணை | 24 |
| தாமப் பொதுவரிலம் | 43 |
| திங்கணுத லாயிழையார் | 5 |
| திருவரங்க மாற்றுச் | 1 |
| தும்பை புனையரசர் | 19 |
| தூய மறையாளர் | 20 |
| தேங்குழலார் மெய்யு | 39 |
| தேசுமணி மாடம் | 25 |
| நந்தாப் பெருஞ் செல்வர் | 30 |
| நம்பாரி வில்லறத்தை | 29 |
| நம்புமெழி லாடவரெங் | 42 |
| நம்மா னிடவீரர் | 46 |
| நல்ல கதிரினையே | 33 |

| | | | |
|---|---|---|---|
| நாடியே நான் பணிந்தே | 2 | மங்கையர்தம் மார்பு | 9 |
| நூலருமை சற்றும் | 4 | மச்சமுறும் பண்ணை | 14 |
| நேர்ந்த விரும்பதரை | 42 | மஞ்சார் பொழில்தனி | 36 |
| பக்கமொடு பாமாலை | 41 | மஞ்சுதவழ் மாடம் | 29 |
| பண்டை வயலிற் | 10 | மண்டலத்து மானிட | 46 |
| பம்பு வரிநெல் | 18 | மன்னும் இதயத்தில் | 2 |
| பாரில் விளையாடும் | 37 | மாசீடர் தம்மிடத்தும் | 31 |
| பூண்டபுகழ் மன்னவரும் | 28 | மாற னடியாராம் | 26 |
| பூமாட்டுச் சந்தைகளிற் | 37 | மிக்கார் திருமொழியும் | 34 |
| பூமேவு கான் மதகு | 22 | மிஞ்சுமதன் மன்னவர் | 43 |
| பேசமுறு மெந்தப் | 40 | மையணிகண் ணார்கை | 39 |
| பேரா விலங்கையர்கோ | 13 | வஞ்சியர்தங் கண்ணி | 12 |
| பொங்கு மதகரிகள் | 43 | வந்தனமே செய்யவரும் | 18 |
| பொங்கேரி யிக்குவனம் | 18 | வம்புமலர்த் தண்டலை | 31 |
| பொன்னூர் புரிசைகளும் | 10 | வம்புமலர் வாவி | 45 |
| போற்ற வருவோர் | 41 | வாசமுறு யோகியரும் | 11 |
| மங்கலநற் பாலிகைகள் | 20 | வாணுதலார் சேர்ந்தில | 44 |
| மங்காத பொன்னறை | 7 | வாதமிடு பண்டிதரும் | 30 |
| மங்காத வெப்பொரு | 23 | வாம்பரிசெல் வீதி | 11 |
| மங்காப் புறநகரில் | 40 | வாரணிந்த கொங்கை | 12 |
| மங்குல் தவழ் சோலை | 12 | வாழுமட வார் கரம்தேர் | 95 |
| மங்குலெனுங் கூந்தல் | 34 | வீசுதிரைக் காவிரியும் | 28 |


## பிழை திருத்தம்

| பக்கம் | பாடல் | விபரம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| xvi | சந்தவிருத்தம் | வரி-7 | தென்றிப்பேரை | தென்றிருப் பேரை |
| 19 | 21 | உரை | வாரணம்-மூங்கில் புல்லாங்குழல் | வாரணம்-சங்கு-பாஞ்சஜன்யம் |
| 24 | 45 | செய்யுள்வரி-4 | வாழ்வு | ஆர்வு |

# குறிப்புரை அநுபந்தம்

| பக்கம் | செய்யுள் | விபரம் | விஷயம் |
|---|---|---|---|
| 7 | 5 | உரை, வரி-4 | (மென்மையினால்)-என்பதை (நுட்பத்தால்)-எனக்கொள்க. |
| 11 | 14 | உரை, வரி-1 | அசலும்-நீங்கும், எனச்சேர்க்க. |
| ,, | ,, | ,, 4 | வாச வுரங்கூடு - துளவசந்த ஞதிமணம் பொருந்திய உரத்திற் கூடு, என்றும் பொருள் கொள்க. |
| 21 | 36 | உரை, வரி-6 | முரசு அங்கன் -முரசு அடையாளக் கொடியை யுடைய, என விரித்துக் கொள்க. |
| 32 | 64 | உரை, வரி-2 | (யாக மேடையிலும்) - என்பதை (ஓமகுண்டங்களிலும்) எனக் கொள்க. |
| 34 | 69 | உரை, வரி-1 | மிக்கார் திருமொழியும்- என்பதற்கு மகிமை மிகுந்தவர்களாகிய ஆழ்வாராதியரது திருவாக்குக்களாகிய திவ்ய பிரபந்தங்கள் எனவும் பொருந்தும். |
| 36 | 73 | உரை, வரி-1 | மரை-ஒருவகை மான். |

இதற்குமுன் வெளிவந்துள்ள, இந்நூலாசிரியரது

## தனிப்பா மஞ்சரியிற்

## சேர்க்கப் பெற வேண்டிய செய்யுட்கள்.

---

திருவரங்கச் சிலேடை மாலைக்குப் பொருளுதவி செய்த

**ஸ்ரீமான். A. V. திருவேங்கடத்தையங்கா ரவர்கள்**

வேண்டுகோட் கிணங்கப் பாடிய

### ஆனைக்கும் கோபுரத்துக்கும் சிலேடை

வெண்பா

கும்பம் மருவிடலால், கோவை அணுகிடலால்,
இம்பரே றும்படியி ருக்கையால்,—வம்புமலர்த்
தேனனைய வின்சொல் திருவேங் கடத்தானே!
ஆனைநிகர் கோபுரமே யாம். (1)

குறிப்புரை:— கும்பம் மருவிடலால் - (யானை) மத்தகத்தைப் பொருந்தியிருப்பதால், (கோபுரம்) ஸ்தூபிகளைப் பொருந்தியிருப்பதால்: கோவை அணுகிடலால் - (யானை) அரசரைச் சேர்ந்திருப்பதால், (கோபுரம்) ஆகாயத்தை அளாவியிருப்பதால்: இம்பர் ஏறும் படி யிருக்கையால் - (யானை) இவ்வுலகத்தோர் ஏறிச் செல்லும்படியிருப்பதால், ஏறுமாறு படிந்து கொடுப்பதனால்; (கோபுரம்) மனிதர் ஏறும் படிகளோடு பொருந்தியிருப்பதால்:

### நம்மாழ்வார் - திருத்தேர்

வெண்பா

எட்டெழுத்தி னைத்தேர்! இரண்டின் மகிமைதேர்
மட்டில் சரமகவி மான்மியந்தேர்!—சிட்டரைத்தேர்!
எர்மாறன் மாமதந்தேர்! என்றுமுழக் கங்காட்டும்
சீர்மாறன் ஏறிவரும் தேர். (2)

குறிப்புரை:— முதலில் உள்ள 'தேர்' என்னும் பதங்கள் ஐந்தும் 'தெளியுங்கள்' என்னும் பொருளில் வருவன. இரண்டு-த்வயம். சரமகவி மான்மியம்-கீதையின் கடைசி சுலோகத்தின் மகிமை. எர்

மால் தன் மதம்-அழகிய வைஷ்ணவ மதம். மாறன் எறிவரும் தேர்-தேர், தேர் என முழக்கங் காட்டும் என்க.

## தனிப்பா மஞ்சரிக்குப் பொருளுதவி செய்த ஸ்ரீவைகுண்டம் திருவாளர் T. S. பொன்னம்பலநாத முதலியாரவர்களது உதாரகுணத்தைக் குறித்துச் சிலர் ஐயுற்றபொழுது பாடிய வெண்பா

வள்ள லெனிலென்? வரும்புலவோர்க் கீயாத
கள்ள னெனிலென்? கவிரசங்கண்—டுள்ளுவந்து
கங்குலுக்கை யொன்றே 'கனகாபி ஷேகம்'எற்குப்
புங்கவன்பொன் னம்பலனைப் போல். (3)

குறிப்புரை:— கம் குலுக்கை - சிரகம்பிதம், தலையசைத்தல். புங்கவன்-பிரகஸ்பதியை யொத்த அறிவாளி.

---

## ஸ்ரீ ரங்கநாதன் பேரில் நிரோட்டக வெண்பா

அரங்கத் தகியணையி லண்டியே யண்டர்
தரங்கக் கடற்று ரணியார்—சிரங்களினல்
எத்திடநன் னித்திரைசெய் யெந்தா யடியேனைக்
காத்திடலே நின்றன் கடன்.

நிரோட்டகம்:- உதடு ஒன்றோடொன்று ஒட்டாமலும், குவியாமலுமுள்ள எழுத்துக்களாகிய உ - ஊ - ஒ - ஓ - ஔ, டி உயிர் மெய் யெழுத்துக்கள், ம-ப-வ ஆகிய இவ்வெழுத்துக்கள் வராமல் பாடுவது.

குறிப்புரை:— அரங்கம்-ரங்கவிமானம்; அகியணை-சேஷசயனம்;

---

அச்சிட்டவை:

1. பத்மநாபசுவாமி சந்திரகலாமாலை } தற்சமயம் கைவசமில்லை; விரைவில் வெளிவரும்.
2. கண்ணன் கிளிக்கண்ணி
3. ஞானசித்தர் வேள்வி விளக்கம்
4. ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி யவர்கள் மகுடதாரண வைபவ வெண்பா மாலை
5. தனிப்பா மஞ்சரி (குறிப்புரையுடன்) – விலை அணா 8
6. திருவரங்கச் சிலேடை மாலை (குறிப்புரையுடன்) – விலை அணா 6
7. திருப்பேரைக் கலம்பகம் (அரும்பொருள் விளக்கத்துடன்) – விலை அணா 8

விரைவில் வெளிவருபவை:

8. திவ்ய தேசப் பாமாலை
9. மணவாளமாமுனி ஊசல் திருநாமம்
10. நீதிவெண்பா-நாற்பது (மூலமும் உரையும்)

இந்நூலாசிரியரது பிரபந்தங்களையும் தனிச் செய்யுட்களையும் பார்வையிட்டுப் பற்பல வித்துவான்கள் வரைந்துள்ள அபிப்பிராயங்கள் "மதிப்புரைத் திரட்டு" என்னும் பெயரான் புத்தக வடிவில் வெளிவரும்.

---

கிடைக்கும் இடங்கள்:–

ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்கார்,
வானமாமலை மடம் ஆஸ்தான வித்வான்,
தென்திருப்பேரை. (திருநெல்வேலி ஜில்லா)

A. இராஜகோட்டியப்ப பிள்ளை,
தமிழ்ப் பண்டிதர்,
இராமமூர்த்தி ரோடு, விருதுநகர்.